11 - 06 - 2000



255.22
வரத
SL/PR

கொட்டாஞ்சேனை

# ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய

# மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்

ஆலயத்தில் வாரியார் சுவாமிகள்



விநாயகர் சதுர்த்தியில் வீதி உலா




அறங்காவலர் அருளுரை



கௌரவம் பெறும் அருளாளர் சி.பாலசுப்பிரமணியம்





உ

சிவமயம்

# சமர்ப்பணம்.....

எல்லாம் வல்ல
இறையருளாலும்
இறையருள் பெற்ற
எல்லோர் ஆசியாலும்
இந்தச் சிறிய
சிறப்பு மலரை
அகண்ட தீபமாக
அணையா விளக்காக
ஒளி தந்து வழிகாட்ட
இறைவனை வேண்டி நாம்
தினமும் போற்றித் துதிக்கும்
ஸ்ரீ வரதராஜ விநாயகர் பெருமானின்
திருவடிகளில் சமர்ப்பிக்கிறோம்.

எச். எச். விக்கிரமசிங்க

*தொகுப்பாசிரியர்*

உ

கணபதி துணை

# கொழும்பு கொட்டாஞ்சேனைபதி அமர்ந்த அருள்மிகு ஸ்ரீ வரதராஜ விநாயகர்

# மகா கும்பாபிஷேக ஆசிச்செய்தி

(கும்பாபிஷேக பிரதம சிவாசார்யார்)

*திகட சக்கர செம்முகம் ஐந்துளான்*
*சகட சக்கரத்தாமரை நாயகர்*
*அகடசக்கர விண்மணி யாவுறை*
*விகட சக்கரன் மெய்பதம் போற்றுவாம்.*

"அர்ச்சகார்ய பிரபாவகா தேவ சான்னித்தியகா" என்பது ஆகமவசனம் முப்போதும் திருமேனி தீண்டும் பிராமணர்களின் உணர்விலே தான் மூர்த்தி சான்னித்தியம் பொறுவர் என்பது குறிப்பிடத்தக்கது.



சைவ வைஷ்ணவ சமயத்திலே கணபதி வணக்கம் முதலிடம் வகுத்து உள்ளது. கணபதி என்பது பூதகணங்களினால் சேவிக்கப்படுவதால் ஏற்பட்ட பெயர். விநாயகர் என்பது தனக்கு மேல் நாயகமாக விளங்கி முதல் வழிபாட்டுக்கு உரியவர் என்பது காரணம். விக்கின ஈஸ்வரன் என்ற நாமம் மக்களுக்கு ஏற்படும் விக்கினங்களை நீக்கும் தன்மையால் விக்கின ஈஸ்வரன் என்ற சிவத்தன்மையைக் குறிப்பதாகும் இவ்வளவு பெருமை வாய்ந்த அருள் தெய்வமாகிய விநாயகப்பெருமான் முப்பத்திரண்டு விதமான மூர்த்தங்களை பதினாறு முகூர்த்தங்களையும் கொண்டவர் இவை சிற்ப சாஸ்த்திரம் சிவாகமங்களில் இதன் சிறப்பைக் காணலாம் ரூபம், ஆயுதம், நிறம், குணம், வடிவம் என்பன ஆகமத்திலும், சிற்ப ரத்தினாகரத்திலும் விளக்கமாகக் கூறப்பட்டு இருப்பதைக் காணலாம். பதினாறு கணபதிகளின் நாமங்களின் விபரம் பின்வருகின்றன. பாலகணபதி, தருணகணபதி, பக்திகணபதி, வீரகணபதி, சக்திகணபதி, பிரம்மகணபதி, பிங்களகணபதி, உச்சிட்டகணபதி, விநாயககணபதி, க்ஷிப்பிரகணபதி, ஹேரம்பகணபதி, லட்சுமிகணபதி, மகாகணபதி, விக்கினகணபதி, நிருத்தகணபதி, ஊர்த்துவகணபதி என்பன பதினாறு முகூர்த்தங்கள். இவை இந்தியாவில் சில ஆலயங்களில் பார்க்கலாம் இவ்விதமான முறையில் பஞ்சமுக விநாயகர், ஐந்து முகங்கள், பத்துக்கரங்கள் கொண்ட விக்கிரகம் இது ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்ஜோ ஜாதம் என சிவதத்துவத்தைக் குறிக்கும். நிலையானது முருகன் ஆலயத்தில் ஷண்முகப் பெருமான் போல விநாயகர் ஆலயத்தில் பஞ்சமுக விநாயகர் சிறப்பு அம்சமானவர். ஆகவே மேற்படி ஆலயம் மிகவும் சுருங்கிய சிறிய இடத்தில் அமைந்து மக்களுக்கு அருள் பிரவாகம் நிறைந்த ஆலயமாக விளங்குகின்றது. இதனைப் புனரமைத்து முதலாவது குடமுழுக்கு வைபவம்

(10 – 07 – 1962)ம் ஆண்டு ஆனிமாதம் அத்த நட்சத்திரத்தில் நடைப்பெற்றது அதனைத் தொடர்ந்து இரண்டாவது குடமுழுக்கு வைபவம் (27 – 11 – 1988)ம் ஆண்டு கார்த்திகை மாதம் புநர்பூச நட்சத்திரத்தில் கபாலீஸ்வரர், கற்பகாம்பாள், சண்டேஸ்வரர், பைரவர், நாகர், முருகன், வள்ளி, தெய்வானை அம்பாள், பஞ்சமுக விநாயகர் ஆகிய மூர்த்திகள் இராஜ கோபுரம் என்பனவற்றிற்கு மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. இவ்வைபவம் கோயில் சிவாச்சாரியார் சோமஸ்கந்தக் குருக்கள், சிவப்பிரகாசம் இருவரும் இணைந்து சைவப்பெரியார்களின் நிதியுதவியுடன் சிறப்பாக நடைபெற்றது. முதலாவது கும்பாபிஷேகமும், இரண்டாவது கும்பாபிஷேகமும் அடியேனுடைய கைங்கர்யமாக நடைபெற்றது. இப்போது நடைபெறும் கும்பாபிஷேகமும் சபையினரின் அயராத முயற்சியினாலும் விநாயகரது திருவருளாலும் சிறப்பாக அமைக்கப்பட்டு, வரும் நிகழும் விக்கிரம வருடம் (11 – 06 – 2000) அத்த நட்சத்திரமும் பூர்வபட்சமும் கூடிய நன்னாளில் நடைபெறத்திருவருள் கூட்டி இருக்கின்றது இந்த கைங்கர்யத்தையும் எனது திருக்கரங்களினால் நடத்தக் கூடிய அநுக்கிரகத்தை விநாயகப் பெருமானின் கட்டளையாக அமைந்துவிட்டது. இப்படியான அரியதோர் நிகழ்வு மூலம் உலகில் மக்கள்படும் துன்பம், துயரம், மனக்கிலேசம், யுத்தபயம், அரசியல் கெடுதிகள் எல்லாவற்றிலும் இருந்து நாடும், நகரமும், மக்களும் அரசியலும் நற்பலன் பெறவேண்டி விநாயகப் பெருமானின் பொற்பாத மலரை அர்ச்சித்து எமது பிரார்த்தனையும் ஆசியையும் உள்ளன்புடன் மிகவும் வேண்டி அமர்கின்றேன். உலகில் மக்கள், சுமங்கலிகள், கன்னிப்பெண்கள், ஆண் பிள்ளைகள் சிறப்பான கல்வி விவேகம், உத்தியோகம், உயர்தொழில், ஒழுக்கம், சமயபக்தி, வர்த்தகர்கள் மனக்கிலேசமின்றி வாழ்வு பெறுதல், கன்னிப் பெண்கள் வழமான வாழ்வு, சந்தானப்பிராப்த்தி என்பன பெற்று சிறந்த வாழ்வு பெற எல்லாம் வல்ல வரதராஜ விநாயகர் திருவருள் துணை உண்டு.

"சுபம்"

*"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"*

*ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி*

இங்ஙனம்

பிரம்மஸ்ரீ சாமி, விஸ்வநாதக் குருக்கள்,

*(பிரதிஷ்டா சிரோண்மணி, சுவாநுபூதி, கிரியா கிரமஜோதி, சிவாச்சார்ய சக்கரவர்த்தி சிவாச்சார்ய தூரந்தர், வேதாகம சூடாமணி, சைவ வைஷ்ணவ ஆகம கிரியாகலாநிதி)*

*(கொழும்பு – நாவலியூர்)*

*இலங்கை.*

☆☆☆☆☆☆☆

# தேவஸ்தான ஓதுவார்கள்



அருட் கலைத் திலகம்
வே. தம்பிராஜா



தொண்டன்
க. இராஜேந்திரன்

# ஸ்ரீ வரதராஜ விநாயகர் வழிநடத்துகிறார்.

ஆயிரத்து தொள்ளாயிரத்து தொன்னூற்றி ஓராம் ஆண்டு எங்கள் இருவரிடமும் கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம் காலஞ் சென்ற அமரர். திரு நீதிராஜா அவர்களினால் ஒப்படைக்கப்பட்டது. அன்று இந்தக் கோயில் எப்படி இருந்தது என்பது கொட்டாஞ்சேனை வாழ் பக்தர்கள் அறிவார்கள். இன்று இக்கோயில் வளர்ச்சியடைந்து அருள்மிகு கோவிலாகப் பிரபல்யமாக விளங்குகின்றது என்றால் அதற்கு யார் காரணம்?

அறங்காவலர்களா இல்லை
சிவாச்சாரியர்களா இல்லை

யார் இக்கோவிலை நடத்துகிறார்கள்? ஸ்ரீ வரதராஜப் பெருமான்தான் இக்கோயிலைக் கொண்டு நடத்திக்கொண்டிருக்கிறார்.

''அவனின்றி அணுவும் அசையாது'' என்ற முதுமொழி முற்றிலும் உண்மை. இதைத்தான் திருநாவுக்கரசர் திருத்தாண்டகத்தில் ''ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரோ அடக்குவித்தால் யாரொருவர் அடங்காதாரோ'' என்று பாடினார்.

விநாயகர் ஆட்டுவித்தார் நாங்கள் ஆடினோம், அவர் பணிவித்தார் நாங்கள் பணிந்தோம். இதுதான் சத்தியமான உண்மை. இக்கருத்து அறங்காவலர் மனத்திலே, சிவாசாரியர்கள் மனத்திலே, கோவிலில் மற்றப் பணியாளர்கள் மனத்திலே, வருகின்ற பக்தர்கள் மனத்திலே கல் மேல் எழுத்துப்போல் பதிந்திருக்கின்ற வரையில் கோவில் வளரும். இறைவன் அருள்பாலிப்பான். பக்தர்கள் பிறவிப் பயனடைவார்கள்.

அறம் என்றால் தருமம் என்று அகராதி பொருள் சொல்லுகின்றது. தருமத்தைக் காப்பதே தமது பணியாகக் கொண்டவர்கள்தான் அறங்காவலர்கள். அறநெறிக்கு உதாரணம் யார் என்று பார்த்தால் கம்பன் சொல்கிறான்

மறைகளும் முனிவர் யாரும்
மலர்மிசை அயனும் மற்றைத்
துறைகளில் முடிவும் சொல்லும்
துனிபொருள் துணிவில் தூக்கி
அறைகழல் இராமன் ஆக்கி
அறநெறி நிறுத்த வந்தது.

இராமன் அறநெறி நிறுத்தினான் என்றால் நாம் தருமத்தைக் கடைப்பிடிக்க இராமபிரான் போன்று அறங்காவலர்கள் வாழ முடியாவிட்டால்கூட சில அடிப்படைக் குணங்களையாவது கடைப்பிடிக்க வேண்டும்.

முதலில் அறங்காவலர்களுக்கு நான் என்ற எண்ணம் அறவே இருக்கக்கூடாது. நான் அறங்காவலர் என்று யார் நினைக்கின்றார்களோ அவர்கள் கோவிலை நிர்வாகிக்கும் தகுதியை இழந்து விடுகின்றார்கள். நல்லூர்க் கந்தசுவாமி கோவில் உலகப் பிரசித்தி பெற்றது. இலங்கை வாழ் எந்தத் தமிழனும் இக்கோவில் பற்றி அறிவான். இக்கோவிலில் விஷேட நாட்களில் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் கந்தனைக் காண வருவார்கள். இங்கே கோவிலுக்கு யார் அறங்காவலர்கள் என்று அறிந்து கொள்ளமுடியாது. அறங்காவலர் திரு. குமாரதாச மாப்பாண முதலியார் கூட்டத்திலே முன்னே அல்ல எங்கேயாவது ஒரு பக்கத்தில் சாதாரண பக்தர் போன்று கூட்டத்தோடு கூட்டமாக நிற்பார் என்று சொல்லுவார்கள். சாதாரண உடையணிந்து பக்த கோடிகளில் ஒருவராகவே அவரைக் காண முடியும். இந்தப் பெரியவர் தந்த பாடத்தைச் சற்றேனும் நாம் மனதில் கொள்ளவேண்டாமா?

அறங்காவலர்கள் ஒருவரை ஒருவர் கலந்து எதையும் செய்வதன் மூலம் பக்தர்களுக்கு எல்லா நலன்களும் கிடைக்கப்பெறுகின்றன. எந்த ஒரு கருத்தையும் இதுதான் சரி என்று நிலைநிறுத்த முயலாமல் விட்டுக் கொடுத்து தொண்டு செய்வதுதான் உண்மையான இறைபணி. அறங்காவலன் என்று நீ அழைக்கப்படுவது கடமைகளைச் செய்வதற்கு மாத்திரமே. உரிமைகள் எதுவும் கொண்டாடப்படுவதற்கு அல்ல. ஸ்ரீ வரதராஜ விநாயகர் எங்களுக்குக் காட்டிய வழியும் இதுவே.

கருத்து வேறுபாடுகள் வருவது இயற்கை. பரமசிவனுக்கும் பார்வதிக்கும் இடையே பல கருத்து மோதல்கள் இருந்தாக நமது புராணங்கள் கூறுகின்றன. நாம் கணவனாக, தந்தையாக, தனையனாக, சகோதரனாக, நண்பனாக வாழ்க்கையின் ஒவ்வொரு பாத்திரமேற்கும் பொழுதும் கருத்து வேறுபாடுகளைச் சந்திக்கின்றோம். இதை நல்ல முறையில், அன்பு வழியில், அறத்தை மனதில் கொண்டு தீர்ப்பவனே உண்மையான அறங்காவலன்.

இறைவனே கதியாக, இறைவனே நினைவாக, இறைவனையே எண்ணங்களில் நிறுத்தி வாழ்பவர்களை இறைவன் வழிநடத்துவான். அபிராமிபட்டர் அபிராமி அந்தாதியில் "நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பது உன்னை" என்று சொன்னது போல் சிறிதேனும் நடந்தால் அவன் என்றும் எம்மை வழிநடத்திச் செல்லுவான்.

பொ. பாலசுந்தரம்
*அறங்காவலர்*

தெ. ஈஸ்வரன்
*அறங்காவலர்*

# கிரியா கால நிகழ்ச்சிகள்

**5.6.2000 23 வைகாசி திங்கள்**

காலை 7.00 மணிக்கு முகூர்த்தக்கால் நாட்டுதல்.

**6.6.2000 24 வைகாசி செவ்வாய்**

அதிகாலை 4.30 மணிக்கு விநாயகர் வழிபாடு, எஜமான் சங்கற்பம், புண்ணியாக வாசனம் தேவப்பிராம்மண அனுஞ்ஞை, தலவிருக்ஷச பூஜை, திரவிய சுத்தி.

காலை 9.00 மணிக்கு கணபதி ஹோமம், நவக்கிரஹமகம்.

மாலை 5.00 மணிக்குகிராமசாந்தி, பிரவேசபலி, இரக்ஷோக்கின ஹோமம், திசா ஹோமம்.

**7.6.2000 25 வைகாசி புதன்**

காலை 9.00 மணிக்கு வாஸ்துசாந்தி, மிருத்சங்கிரகணம், பிரசன்னபூஜை.

மாலை 6.00 மணிக்குஅங்குரார்ப்பணம், இரக்ஷாபந்தனம், யாகபரிவார கும்பபூஜை, கடஸ்தாபனம், கலாகர்ஷணம், யாத்திராஹோமம், பிரதான கும்பம், யாகசாலா பிரவேசம், யாகசாலையில் பிரதான கும்பஸ்தாபனம், பூஜை, வேதிகார்ச்சனை, அக்கினி உத்பவம்.

**8.6.2000 26 வைகாசி வியாழன்**

அதிகாலை 5.00 மணிக்கு மூலஸ்தான ராஜகோபுர கலசஸ்தாபனம், கோவாசம், தீபஸ்தாபனம், விம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம்.

காலை 9.00 மணிக்கு ஆசார்யசந்தியானுஷ்டானம், யாகபூஜை, அக்கினி விபஜனம், பஞ்சகுண்ட அக்கினி பூஜை, தீபாராதனை, பிரசாதம் வழங்குதல்.

*பிற்பகல் 4.00 மணிக்கு மேல் மறுநாள் வெள்ளிக்கிழமை (9.6.2000) மாலை 4.00 மணிவரை எண்ணைக் காப்பு சாத்துதல்.*

மாலை 6.00 மணிக்கு யாகபூஜை, ஹோமம், தீபாராதனை, வேதஸ் தோத்திர தேவாரபாராயணம், பிரசாதம் வழங்குதல்.

**9.6.2000 27 வைகாசி வெள்ளி**

காலை 8.00 மணிக்கு விக்கினேஸ்வர பூஜை, புண்ணியாகம், ஆசார்யபஞ்சசுத்தி, யாகபூஜை, பாவனாபிஷேகம், பஞ்சாக்கினிஹோமம், மூலமந்திரதிரிசதிநாமஹோமம், பூர்ணாகுதி, தீபாராதனை, வேதஸ்தோத்திரதேவாரபாராயணம், விபூதிப்பிரசாதம் வழங்குதல்.

மாலை 6.00 மணிக்கு யாகபூஜை, மாலாமந்திர சங்கடநாசகணபதி ஹோமம், பூர்ணாகுதி, தீபாராதனை, வேதஸ்தோத்திர தேவாரபாராயணம், விபூதிப்பிரசாதம் வழங்குதல்.

**10.6.2000 28 வைகாசி சனி**

காலை 9.00 மணிக்கு யாகபூஜை, ஷடத்துவபநியாசங்கள் ஆவாகநம், உபசாரபூஜை, அக்கினி வழிபாடு, விஷேடதிரவிய ஹோமம், ஹோமம், பூர்ணாகுதி, தீபாராதனை, வேதஸ்தோத்திரதேவாரபாராயணம், மங்கள இசை, விபூதிப் பிரசாதம் வழங்குதல்.
மாலை 6.00 மணிக்கு ஆலயசுத்தி, பிம்பசுத்தி, கலசபூஜை, ஜபம், யாகபூஜை, பிம்பசுத்தி கௌதுகபந்தனம், பூர்வசந்தானம், அக்கினி வழிபாடு, பச்சிமசந்தானம், யாகபூர்ணாகுதி, விசேஷ தீபாராதனை, பஞ்சமுகார்ச்சனை, வேதஸ்தோத்திரதேவாரபாராயணம், மங்கள இசை, சிற்பாசரி சம்பாவனை, குருமார் சம்பாவனைகள், பிரசாதம் வழங்குதல்.

**11.6.2000 29 வைகாசி ஞாயிறு**

காலை 7.00 மணிக்கு யாகபூஜை, மகாபூர்ணாகுதி, ஸ்திராகுதி, அந்தர்பலி, பகிர்பலி, யாக விஷேட தீபாராதனை, வேதஸ்தோத்திரம், ஆசீர்வாதம், பஞ்சபுராணம், நாதாஞ்சலி, யாத்திரதானாதிகள்.

*காலை 9.30 மணி முதல் 10.00 மணிக்குள் ஸ்தூபிகள்*
*இராஜகோபுர அபிஷேகம்*

காலை 10.30 மணிக்கு பிரதான கும்பம், வீதி பிரதக்ஷணம், புஷ்பாஞ்சலி, மூலாலயப்பிரவேசம், வேதாகமப்பிரகாரமூர்த்திசம்யோஜனம், பஞ்சகராகுப்பிரீதி.

***காலை 11.15 மணிக்கு மஹாகும்பாபிஷேகம்***, பரிவார மூர்த்திகள் அபிஷேகம், கோதர்சனம், மங்களதர்சனம், மஹாதீபாராதனை, எஜமான் அபிஷேகம், கும்பாபிஷேக பல சமர்ப்பணம், விபூதி தீர்த்தப்பிரசாதம் வழங்குதல்.
நண்பகல் 12.00 மணிக்கு மகாபிஷேகம், தீபாராதனை, விபூதிப்பிரசாதம் வழங்குதல்.

*மஹேஸ்வர பூஜை (அன்னதானம்)*

பிற்பகல் 3.00 மணிமுதல் 5.00 மணிவரை ஆலயங்களின் சிறப்பு மரியாதை ஏற்று அருளல்.
மாலை 6.00 மணிக்கு சாயரட்சை பூஜை தொடர்ந்து 8.00 மணிக்கு உற்சவமூர்த்தி தீபாராதனை, சுவாமி உள்வீதி வலம் வருதல், மங்கள ஆசீர்வாதம், விபூதிப்பிரசாதம் வழங்குதல்.

# இரண்டு வேத சாகரங்கள் கொழும்பில் சங்கமம்

- எச். எச். விக்கிரமசிங்க-



இரண்டு ஆசார்ய சிரோமணிகள்
சேர்ந்து கொழும்பு
கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ
விநாயகர் ஆலய சம்புரோக்ஷண
மகா கும்பாபிஷேகப் பெரு
விழாவை வைகாசி 29ம் திகதி
11.06.2000 ஞாயிறன்று
நடாத்துகின்றனர்.



ஒருவர் :

வரதராஜ விநாயகர் பெருமானின் திருவருட் கடாட்சம் பெற்றவர். கடந்த 48 வருட காலமாக விநாயகப் பெருமானுக்குப் பக்தி பூர்வமாகத் தொண்டாற்றி வரும் பிரம்மஸ்ரீ ந. சோமாஸ்கந்தக் குருக்கள். 1962.07.10 ஆனிமாத அத்த நட்சத்திரத்திலும் 1988.11.27 கார்த்திகை மாதப் புனர்பூச நட்சத்திரத்திலும் நடைபெற்ற கும்பாபிஷேகப் பெருவிழாவின் போது தேவஸ்தானப் பிரதம சிவாச்சாரியராக இருந்து விநாயகப் பெருமானுக்குத் தொண்டு செய்யும் பேறு பெற்றவர். வரதராஜர் தகரக்கொட்டிலில் கொலுவிருந்த 1952ம் ஆண்டுமுதல் நித்திய பூஜை செய்ய ஆரம்பித்தவர். இன்று ஆலயம் பெரும் கட்டிடத்துடன் வியாபித்திருந்த போதும் ஆலயத்தின் பிரதம குருவாக இருந்து வருகின்றார். தனக்குத் தொண்டு செய்யவே விநாயகர் இவரை இன்றும் ஆலயத்தில் வைத்து இருப்பதாக எண்ணத் தோன்றுகிறது. வரதராஜ விநாயகர் பேரருளுக்குப் பாத்திரமாகி மூன்றாவது தடவையாக நடைபெறும் கும்பாபிஷேகப் பெருவிழாவின் போதும் – விநாயகப் பெருமானுடன் இருக்கப் பாக்கியம் பெற்றவர்.

மற்றவர்:

ஈழத்து சிவயோகி இந்து சமயத்தின் ஞான விளக்காகத் திகழ்பவர். பலநூற்றுக் கணக்கான கும்பாபிஷேகப் பெருவிழாக்களை இலங்கை உட்பட ஆசிய ஐரோப்பிய நாடுகளில் நடாத்தித் திருவருள் பாலிக்கச் செய்த பிரதிஷ்டா சிரோன்மணி, கிரியா கலாநிதி சிவாச்சாரிய சக்கரவர்த்தி நாவலியூர் சாமி விஸ்வநாதக் குருக்கள் . 1962, 1988 எனும் ஆண்டுகளில் ஸ்ரீ வரதராஜ விநாயகருக்கு நடைபெற்ற கும்பாபிஷேகப் பெருவிழாவின் போது தலைமைக் குருவாக அமர்ந்து அழகு, அமைதி, அருட் பொலிவு, மூன்றும் ஒருங்கமைந்த ஆலயமாக ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம் மிளிர வழி சமைத்தவர். சாதி மத பேதமின்றி ஏழை பணக்காரர் என்ற பாகுபாடின்றி அனைவரையும் ஒன்றாகவே காணும் பிரதிஷ்டா சிரோன்மணி அவர்களை தரிசனம் செய்வதே நாம் அனைவரும் செய்த மிகுந்த பாக்கியமாகும்.

கொழும்பு தமிழ்ச் சங்கம்

ஆன்மீக வேத அறிவும் அலங்கார தெய்வ அழகும் இறைவனையே இனங்காண வைக்கும் பக்தி பூர்வமான வேதக் கிரியைகளும் தீட்சண்யமான கருணைமிகு அருட்பார்வையும் தேனிலும் இனிய குரலும் தெய்வப் பிறவியான சாமிவிஸ்வநாதக் குருக்கள் நம் காலத்தில் வாழ்ந்து வருவது நம் முன்னோரும் நாமும் செய்த பூஜை பலனேயாகும்.

இன்று நடைபெறும் கும்பாபிஷேகப் பெருவிழாவை நடத்தி வைக்கும் சந்திர சூரியர்களை ஆசார்ய வடிவில் தரிசிக்கின்றோம். கொட்டாஞ்சேனை மக்களாகிய எம் பூர்வ ஜென்ம பலனை நினைந்து போற்றுவோம்.

கொழும்பு மாநகரம் பூரித்துப் புனித நகராகின்றது. திருவாரூரில் பிறந்தோர் அனைவருக்கும் எவ்வாறு முத்தி அளிக்கின்றதோ அஃதே போல், வரதராஜ விநாயகரின் கோல குடமுழுக்குக் காண்பவர் தரிசிப்பவர் இம்மனிதப் பிறப்பின் மகத்துவத்தை அடைகின்றனர்.

விழாக் காணும் அனைவரும் – ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் ஜோதியைக் கண்ட ஞானியர் போல் ஆகின்றனர்.

வேழ முகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்.

# ஆசார சீலர்

ஐங்கரன் அருளுக்கும் பெருமைக்கும் மூலவிசையாக இருந்து சேவையாற்றியவகள் பலர். அதில் சைவப்பெரியார் எஸ். கனகராஜா அவர்களை இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூருவது பொருத்தமானதாகும்.



- அமரர் எஸ். கனகராஜ்-

அவர் தொண்டனாக இருந்து ஆற்றிய சேவை காலத்தால் அழியாதது. இன்றும் ஒவ்வொருவரும் அவர் புரிந்த சைவப் பணியை பெருமையுடன் நினைவு கூறுகிறார்கள்.

மாணவப் பருவத்திலிருந்தே விநாயகரின் அருட்கடாட்சம் பெற்று அவருக்கே தன் வாழ்நாள் முழுவதும் தொண்டாற்ற திடசங்கற்பம் பூண்டார். அதன் விளைவாக பல்கலைக்கழக, சட்டக்கல்லூரி மாணவனாக இருந்த போது முழுமூச்சாக விநாயகருக்கு சேவையாற்றினார்.

ஒருநாள் கனவில் விநாயகர் தோன்றியதன் பின்னரே அவர் இந்த ஆலயத்தின் பணியில் முழுமையாக தன்னை ஈடுப்படுத்திக்கொண்டார்.

இன்று விநாயகர் கொலுவீற்றிருந்து அருள் பாலிக்கும் நிலப்பரப்பு அவரால் 1958ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தந்தை ஸ்ரீமான் திருவிளங்கம் சபாபதிப்பிள்ளை அவர்களின் நினைவாக உவந்தளிக்கப்பட்டதாகும்.

இப்போது ஐங்கரன் மண்டபம் நிர்மாணிக்கப்பட்டுள்ள இடம் அவரது சகோதரி திருமதி சொர்ணம் சோமகாந்தன் அவர்கள் ஆலயத்துக்காகவே சகாய விலையில் வழங்கப்பட்டதாகும்.

1959ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து சிற்பாசிரியர்களை அழைத்து வந்து தொடர்ந்து 1961 இல் திருப்பணிகளை செய்து பின்னர் 1962 இல் கும்பாபிஷேகத்தை நடத்தி வைக்க காரணமாக இருந்தவர் அமரர் சைவப் பெரியார் எஸ். கனகராஜா அவர்களாவர்.

முதலாவது கும்பாபிஷேகத்தை நடத்துவதற்காக ஐங்கரப் பெருமானே மனித உருவில் தனது இல்லம் வந்து விளைவு கற்பூரத்தை வழங்கிய அற்புதம் மிக்கது இந்த புனித ஆலயமாகும்.

வளர்ந்து கொண்டிருக்கும்

# அருள்மிகு ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம்

சிவஸ்ரீ நடராஜா சோமஸ்கந்தக் குருக்கள் பிரதமகுரு-

**கொட்**டாஞ்சேனை வீதியிலிருந்து வாசல வீதி பிரிந்து செல்லும் சந்திக்கு வடக்கில், சுமார் ஐம்பது மீற்றர் தொலைவில், வீதியின் மேற்கில் குளிர்நிழலைத் தந்து நிற்கும் பென்னம் பெரிய அரச மரத்துடனுள்ளது தான் கொட்டாஞ்சேனை அருள்மிகு ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயமாகும்.



இந்த ஆலயத்தின் தோற்ற காலத்தையோ, பரிபாலனம் பற்றிய நிறைவான செய்திகளையோ இன்று பெறக்கூடிய வாய்ப்புக்கள் பெரியளவிற்கு இல்லையென்றுதான் சொல்ல வேண்டி யிருக்கிறது. எமக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில், எதிர் காலத்தில், ஆய்வுக் கட்டுரைகளைத் தயாரித்துச் சமர்ப்பிக் கவுள்ள பல்கலைக் கழக இந்து நாகரிகத் துறைசார் மாணவர்களுக்குப் பயன்படக் கூடிய தரவுகளை மட்டும் இங்கு தந்துள்ளோம்.

ஆதியில் இங்குள்ள அரச மரத்தடியில் வழிபாடு நடந்திருக்கின்ற தென்று தெரிகின்றது. அந்த வழிபாட்டுத் தொடர்பில், கருங்கல்லிற் செதுக்கப்பட்டதொரு விநாயகரும் வழிபாட்டிற்குரியவராகி இருந்திருக்கின்றார். விநாயகருடன் (கருங்கல்) நாகதம்பிரானும் இருந்திருக்கின்றார். அத்துடன் எண்ணெய் விட்டுத் திரிபோட்டுத் தீப மேற்றக் கூடியதொரு கருங்கல் விளக்கமைப்பும் இருந்திருக்கிறது. அந்தக் கருங்கற் சுடர்தாங்கியில் 1890 என்னும் எண்ணும் எழுத்துக்களும் ஒரு பக்கமாகக் காணப்படுகின்றன. சீமேந்து போட்டுக் கட்டப் பட்டுள்ளமையால் மறுபுறம் என்ன எழுத்துக்கள் உள்ளனவென்று கண்டுகொள்ள முடியவில்லை. அந்தச் சுடர் தாங்கியிலே "கூஅஎகூ" என்னும் தமிழ் எண்குறியீடு உண்டு என்றும் அது 1876ஆம் ஆண்டைக்கு குறிப்பது என்றும் ஒரு கருத்து கிடைத்தது முண்டு. இந்தச் சிறிய பழமை வாய்ந்த பிள்ளையாருடன், 1890 என்றோ 1976 என்றோ ஆண்டினை சொல்லிக் கொண்டிருக்கும் அந்தத் தீப அமைப்பு இருந்த காரணத்தால், இந்த இடத்தில் விநாயகர் வழிபாடு 1890க்கு முன்பிருந்தே இருந்திருக்கிறதென்று துணிய முடிகின்றது. இக் கருத்தை உறுதி செய்யக் கூடிய தக்க சான்றாக அந்த தீப அமைப்பு இன்றும் இருந்து கொண்டிருக்கிறது.

அரச மரத்தடி தெய்வீகத்தை வழிபடும் நோக்கில் இன்றுள்ள படிகளில் ஏறி மரத்தை நோக்கி திரும்பியதும், அடியார்கள் தத்தம் சொந்தக் கரங்களினால் நீர் பெய்து அபிஷேகம் செய்யும்– நீரில் ஒரு பகுதி மறைந்த நிலையில் இருக்கும் – (கருங்கல்) விநாயகரை அந்தக் கால வழிபாட்டிற்குரியவராய் இருந்த வரதராஜ விநாயகர் ஆவார். அவர் பக்கலில் (பக்கத்தில்) அன்றிருந்த நாகதம் பிரானையும் பார்க்க முடிகின்றது. பிள்ளையாரின் பின்னே இருப்பதுதான்

காலம் பற்றியதொரு தகவலைத் தந்து கொண்டிருக்கும் கருங்கற் கழி ஆகும். இவை இந்த ஆலயத்தின் பழம் பெரும் நிதியங்கள் என்பதை எம் மனதிற் பதித்துக் கொள்ள வேண்டும்.

இந்த ஆலயம் எல்லாள மன்னன் காலத்திற்கு முந்தியது என்றும், போர்த்துக்கீசர் காலத்தில் அவர்களது இராணுவ வீரர்கள் இந்த ஆலயத்தை பதுங்கிச் சரணடைந்திருக்கும் இடமாகப் பயன்படுத்தினார்கள் என்றும், ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் தங்களுக்குத் தேவையானவற்றை சுருட்டிக் கொண்டு ஆலயத்தை அழித்து விட்டார்கள் என்றும் கருத்துக்கள் உண்டு. இவையெல்லாம் ஆய்விற்குரியவை.

ஒரு காலத்தில் அரச மரத்தின் வடக்கில் மரத்தடியில் நடைபெற்ற வழிபாடு, மற்றொரு காலப்பகுதியில் அரச மரத்தின் தென்மேற்கில் மரத்திற்கு அண்மையாக நடை பெற்றிருக்கிறது. நாகதம்பிரானும் உடனாகி இருந்திருக்கிறார். இந்த வகை மாற்றம் நிகழ்ந்த காலம் எது என்பதுந் தெரியவில்லை.

முதலாவது உலக மகா யுத்தம் ஆரம்பமாகி இருந்ததில் கொட்டாஞ்சேனை ஸ்ரீ முத்து மாரியம்பாள் ஆலயச் சிவாச்சாரி யார்களது இன்றைய வதிவிடமா யமைந்துள்ள, அன்றைய அரசடி இடுக்காட்டுப் பகுதியில் 1913ல் ஓர் இராணுவ முகாம் அமைக்கப் பட்டிருந்தது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலமாகிய அந்த நேரத்தில் ஆங்கிலேயர் ஆட்சிக் குட்பட்டிருந்த பல நாடுகளைச் சேர்ந்த இராணுவ வீரர்கள் குறிப்பிட்ட அந்த முகாமில் இருந்திருக்கிறார்கள். வட இந்தியாவைச் சேர்ந்த சண்முகர்ஜீ பட்டேல் என்பவர் அந்த முகாமில் தலைமையை ஏற்றுப் பணிபுரிந்து கொண்டிருந்தார். அவர் விநாயகர் வழிபாட்டில் மிகுந்த ஈடுபாடு உடையவர். அதனால் அரச மரத்தடியை இடமாகக் கொண்டிருந்த வரதராஜ விநாயகரை தரிசித்து வழிபடும் முறைமை அவருடையதாயிற்று. இவ்வண்ணந் தொடர்ந்து வந்திருந்த முறைமையால் விநாயக வழிபாட்டிடத்திற்கு அருகாமையில் இருந்த வில்லவராஜா என்பவருடன் அவர் தொடர்பு நெருக்கமாகியது. அத் தொடர்பினால் சண்முகர்ஜீ பட்டேல் வில்லவ ராஜாவின் மகளைத் திருமணம் செய்து கொண்டார். இந்தத் திருமணத் தொடர்பு, சண்முகர்ஜீ பட்டேலுக்கு, விநாயகருடனான தொடர்பை மேலும் வலுவடையச் செய்தது. அரச மரத்தின் தென்மேற்கில் பிள்ளையாருக்கென ஒரு ஆலயம் உருவாகியது. சுவர்களுடன் கூடியதும் தகரத்தால் வேயப்பட்டதுமாகிய அந்த அமைப்பில் 1917 ஆவணியில் விநாயகரை பிரதிஷ்டை செய்து வழிபடும் முறைமையை சண்முகர்ஜீ பட்டேல் உருவாக்கினார். ஆலயத்தை வலம் வந்து வழிபடக்கூடிய வகை ஒரு சிறிய பிரகாரமும் இருந்திருக்கிறது. இப்போது ஓம குண்டம் அமைந்துள்ள இடத்திற்கு மேற்காக, இப்போது உள்ள பலிபீடத்தை ஒட்டினாற் போல் கருவறை அமைந்திருந்தது. மண்டபத்தின் வடக்குச் சுவரில் தெற்கு நோக்கி பழனி ஆண்டவர் இருந்துள்ளார். பழனி ஆண்டவருக்கு கிழக்கில் ஒரு வேல் இருந்திருக்கிறது.

இந்தக் காலகட்டத்தில் பிக்கரிங்ஸ் வீதியில் பஞ்ச லோக வேலை செய்யும் ஆச்சாரியார்கள் வாழ்ந்து கொண்டிருந்தனர். காலப்போக்கில் அவர்கள் வரதராஜ விநாயகருடன் ஈடுபாடுடையவராயினர். 1912இல் சண்முகர்ஜீபட்டேல் நாட்டை விட்டுப் போக நேர்ந்த போது தமக்கு உதவியாளராகவிருந்தவரும் பஞ்சலோக ஆச்சாரியார் சமூகத்தைச் சேர்ந்தவருமான இராமகிருஷ்ணன் என்பவரிடம் ஆலயக் கவனிப்பை ஒப்படைத்துச் சென்றார்.

இரண்டாவது உலக மகா யுத்த நெருக்கடிகளுடன் பிக்கறிங்ஸ் வீதி பஞ்சலோக வேலை ஆச்சாரியார் 1943 இல் இடம் பெயர்ந்தார். அதனால் விநாயகராலய பரிபாலனம் சில ஆண்டுகள் கவனிப்பற்றிருந்தது. இந்த இடைக்காலத்தில் வழிபடுவோர் தத்தம் விருப்பிற்கேற்பத்தாமே வேண்டியவற்றைச்செய்து கொண்டனர். 1944–08–27 இல் தாரண வருடம் ஆனி மாதம் 6ஆம் திகதி திங்களன்று எழுந்தருளி விநாயகர் உபகரிக்கப்பட்டுள்ளது. வழிபாட்டுமுறைமையை ஓர் ஒழுங்கிற்குக்

கொண்டுவர விரும்பிய திருமதி சொர்ணம்மா சுப்பிரமணியம் அவர்கள் அர்ச்சகர் ஒருவரையும் நியமனம் செய்து பூஜை முறைமையையும் ஒழுங்காக்கினார். 1951 இல் இருந்து பரிபாலகர்கள். அறங்காவலர்கள் என்ற முறைமை நடைமுறைக்கு வந்தது. 1952இல் இன்றுமுள்ள சிவஸ்ரீ நடராச சோமஸ்கந்தக் குருக்கள் பூசை நடைமுறையினைப் பொறுப்பேற்றுக் கொண்டார்கள். அன்றிலிருந்து சில சில வேளைகளில் சிறுச்சிறுத் தளர்வு கண்டபோதும் நியாயமான அளவிற்கு நல்லவண்ணம் நடைபெறுகிற தென்றுதான் சொல்ல வேண்டும்.

1961 – 1962 காலப்பகுதியில் சுவாமி பாலஸ்தாபனம் செய்யப்பட்டுக் கட்டிடம் புனருத்தாரணம் செய்யப்பட்டது. கருவறை இப்போதுள்ள இடத்திற்குச் சென்றது. வசந்த மண்டபமும் இப்போதுள்ள இடத்திற்கு தகரக் கொட்டகையாகிச் சென்றது. வசந்த மண்டபத்தின் வடமேற்கில் இருந்து கருவறையின் பின்புறமான வடமேற்கைத் தொடும்படி மூலைப் பக்கமாக ஒரு சுவர் அமைக்கப்பட்டது. அந்தச் சுவருக்கும் அந்த வசந்த மண்டபம் மேற்குச் சுவருக்கும் இடைப்பட்ட முக்கோண அமைப்பான பகுதியே யாகசாலையாகப் பயன் படுத்தப்பட்டது. இந்த வகையான வேலைகள் செய்யப்பட்டு ஆலயத்தின் முதலாவது மகாகும்பாபிஷேகம் 1962. 07.10 ஆனி அத்த நட்சத்திரத்தில் பிரதிஷ்டா சிரோன்மணி நவாலியூர் பிரம்மஸ்ரீ. சாமி விஸ்வநாதக் குருக்கள் தலைமை தாங்கிய சிவாச்சாரியார்களால் நிறைவு செய்யப்பட்டது. 1962.08.24 இல் மண்டலாபிஷேகம் நிறைவாகியது.

1963 ஆனியில் வள்ளி தேவ சேனா உடனாகிய முருகன் எழுந்தருளி உபகரிக்கப்பட்டது. 1964 ஆனியில் சிவகாம சுந்தரி சமேத நடராசர் மணிவாசகருடன் உபகரிப்பாகியது. ஆலயத்திற்கென புதிய இரதம் ஒன்று செய்விக்கும் முயற்சி 1965 ஆனியில் ஆரம்பமாகி 1967 ஆனியில் வெள்ளோட்டம் கண்டது. 1967 ஆனி வருஷாபிஷேகத்தின் போது ஸ்ரீ வரதராஜ விநாயகர் முதன்முறையாகச் சித்திரத் தேர் வீதியுலாவந்த கண்கொள்ளாக் காட்சியைக் கண்டோம்.

பஞ்சமுக விநாயகர் நூதனப் பிரதிஷ்டா கும்பாபிஷேகம் 1972இல் சிவஸ்ரீ நா. சோமஸ்கந்தக் குருக்கள் அவர்களாலே நிறைவு செய்யப்பட்டது. சிவலிங்கம், கற்பகாம்பிகை எழுந்தருளி விநாயகர் ஒருவர் 1988இல் உபகரிப்பாயினர்.

மீண்டும் புனரமைப்பு வேலைகள் நடந்தன. முக்கோண அமைப்பிற்கு அப்பாற் பட்டிருந்த நிலம் பெறப்பட்டு அந்தப் பகுதி வீதியுடனாக்கப்பட்டு அந்தப் பகுதிக்கு மேற்காக யாகசாலை அமைக்கப்பட்டது. இப்போது அலுவலகம் இயங்கிக் கொண்டிருக்கும் கிழக்கு மேற்கான நிலப்பகுதியும் – முன்னைய ஆலயத்தின் தென்பகுதி – பெறப்பட்டுக் கட்டிடம் இன்றைய நிலைக்கு விஸ்தரிக்கப்பட்டது. அந்தப் பகுதியின் மேற்கே களஞ்சிய அறை அமைக்கப்பட்டது. இந்த வேலைகள் நிறைவு காண்பதற்காக சுவாமி பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருப்பணி தொடர்ந்தது. 1988 நவம்பர் 27 கார்த்திகைப் புனர் பூச நட்சத்திரத்தில் பிரதிஷ்டா சிரோன்மணி நவாலியூர் சிவஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் தலைமையில் அமைந்த சிவாச்சாரியர்களால் இரண்டாவது மகா கும்பாபிஷேகமும் நிறைவாக்கப்பட்டது.

ஆலயத்தின் மேற்காக உள்ள நிலம் கொள்வனவு செய்யப்பட்டு அழகிய மூன்று அடுக்குக் கட்டிடம் ஒன்று அமைக்கப்பட்டு ஐங்கரன் மண்டபம் எனப் பெயர் சூட்டப்பட்டு 1995.01.19 இல் திறந்து வைக்கப்பட்டது. திருமணம் முதலான மங்களகரமான கருமங்களும் பொதுக்கூட்டங்கள் என்பனவும் இந்த மண்டபத்தில் நடைபெறுவதுண்டு. எமது இந்து சமய வளர்ச்சிக்கு அறநெறிப் பாடசாலை வகுப்புகளும் நடாத்தப்படுகின்றது. இவ்வாறு சமூக சமுதாயப் பணிகளிலும் இவ்வாலயம் இணைந்து செயற்படுகின்றது என்றால் மிகையாகாது.

உ

# வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்து வரும்

கம்பவாரிதி இ. ஜெயராஜ்



உலகை உய்விக்கும் பெரும் தெய்வம் விநாயகன்
விநாயகன் என்னும் வடசொல்லுக்கு,
தனக்குமேல் ஒரு தலைவன் இல்லாதவன் என்பது பொருள்
அவனே முழுமுதற் கடவுள் என்பது இப்பெயர் தரும் அர்த்தம்
தமிழர் தம் வழிபாட்டு முறை அனைத்தின் தொடக்கத்திலும்
விநாயகனை வழிபடுதல் மரபு
தமிழ்ப் புலவர் பெரும்பாலானோர்
விநாயனை வேண்டியே தம் நூல் இயற்றத் தொடங்கினர்.
நம் இந்து மத வழிபாட்டு முறைகள்,
பாகுபாட்டை வளர்ப்பன என்று, உரைப்பாரை மறுத்து நிற்பது
விநாயக வழிபாடாகும்.
உயர்ந்தவர் தாழ்ந்தவர்
அறிவோர் அறிவற்றோர்
செல்வர் வறியோர் என
எவர்க்கும் வழிபடும் வாய்ப்பை நல்கி நிற்பவன் விநாயகன்
ஏழை எளியவர்க்கெல்லாம் அவனே இறைவன்.
மற்றைய தெய்வங்கள் போல் அணுக அருமையற்றவன்
மஞ்சள் பொடியிலும், களிமண்ணிலும், சாணியிலும் கூட
ஆவாகணம் செய்து அருள்புரிவன்.
அன்பர் தம் வழிபாட்டில் எளிதில் மகிழ்பவன்
எங்கே, எப்படி, எதில் கூப்பிட்டாலும்
அதனுள் வந்து நின்று அருள் செய்பவன்.
அவனை வழிபட அதிகம் படிக்க வேண்டியதில்லை.
மற்றைய தெய்வ வழிபாடுகளில்
பிராணப் பிரதிஷ்டை பண்ணி அந்தந்த தேவதைகளின் ஜீவகலையை உண்டாக்குவது போல
விநாயகனுக்கு செய்ய வேண்டியதில்லை.
மனதால் பாவித்த மாத்திரத்திலேயே எந்த மூர்த்தியிலும் அவர் வந்து விடுவார்.
காலம் பார்த்து, குளிர்த்து, அர்ச்சனைப் பொருட்களோடு பிரகாரம் சுற்றி,
இறைவனை வணங்குவது மற்றைய தெய்வக் கோயில்களில் வழக்கம்.
அங்ஙனம் சென்றாலும் தெய்வத்தின் அருகில் அங்கெல்லாம் செல்ல முடியாது.
விநாயக வழிபாட்டுக்கோ இக் கட்டுப்பாடெல்லாம் கிடையாது.
விநாயகனோ,
தெருமூலைகளிலும், மரங்களின் கீழும், வீட்டு வாசல்களிலும்
நின்று புறம்புறம் திரிந்து நமக்கு அருள் செய்கிறான்.
வேலைக்கோ, பள்ளிக்கோ, கடைக்கோ போய்வருகிற போதுகூட
அவரைப் பார்த்த மாத்திரத்தில் நெற்றியில் குட்டி தோப்புக்கரணம் போட்டு,
எவரும் எந்நிலையிலும் அவரை வழிபடலாம்.
பிரகாரங்களை எல்லாம் தாண்டி உள்ளே இருக்கும் சுவாமிகளை விட,
வீதியில் நின்று அன்பர்க்கு அருள் செய்யும் விநாயகன் அன்புத் தெய்வம்.
வீதியில் நிற்பதால் எளியனாய் இருப்பினும்,
நம் சமயம் தரக்கூடிய ஆழமான, அற்புதமான பயன் அனைத்தையும் நல்கி,
அரியானாய் இருப்பவனும் இவனே.
தோப்புக் கரணமும் நெற்றியில் குட்டுவதும் தெய்வீக உணர்வை ஏற்படுத்தும் யோக முயற்சிகள்.
விநாயகனை வணங்க தத்துவ ஞானம் கைகூடும்.
விநாயக அகவல் இப்பேர் உண்மையை எடுத்துரைக்கும்.
தம் தமிழர்க்கும் விநாயகனே தலைமைக் கடவுள்
ஔவைக்கு சங்கத் தமிழ் மூன்றும் தந்தவன் அவன்.
நற் குஞ்சரக் கன்றை நன்னினால் கலைஞானம்
கற்கும் சரக்கு அன்று என்கிறார் உமாபதி சிவாச்சாரியார்
இங்ஙனமாய், அழைத்த இடத்தில் வந்து அருள் செய்யும் விநாயகன்

கல்வியையும், ஞானத்தையும், முத்தமிழையும், யோகத்தையும், வீட்டையும்
எவர்க்கும் நல்கும் பெருங்கடவுளுமாம்.
அவ்வருங்கடவுள்,
கொட்டாஞ்சேனையில் அமர்ந்திருந்து அமுதக் கடலாய் அருள் செய்கிறான்.
அன்பரை ஈர்த்து நிற்கும் அற்புதன் அவன்
அவன் அருளால் அவன் தாழ் வணங்கவும்,
மற்றவரை வணக்கிவிக்கவும்,
பணிந்து பணியாற்றும் தொண்டர்களாய் வாய்த்த,
திரு பொ. பாலசுந்தரம், தெ. ஈஸ்வரன் ஆகியோர்,
இவ்வாலயத்தை வழிப்படுத்து தர்மகர்த்தாக்களாய் வாய்த்தது,
அவன் அருள் அன்றி வேறென்ன ?
தொண்டர்க்கு தொண்டராய் தமைநினைக்கும் தலைவர்கள் அவர்கள்.
கிரியைகள், சமயச் சொற்பொழிவுகள், பஜனைகள், இசைநிகழ்ச்சிகள்,
அறநெறிப்பாடசாலை என அருந் தொண்டுகளாற்ற ஐங்கரன் பெயரால் அவர்கள் அமைத்த மண்டபம்,
பலருக்கும் பயன் செய்து நிற்கிறது.
விநாயக வழிபாட்டு மரபுக்குப் பொருத்தமாய்,
ஏழைகளின் அடைக்கல இடமாகவும்,
கல்வி, யோகம், ஞானம், முத்தமிழ் ஆகியவற்றை வழங்கி நிற்கும் அற்புதக் கூடமாகவும்,
கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம் விளங்குகிறது.
அருள் செய்யும் மூர்த்தி,
அன்பர்களின் நேர்த்தி,
ஐங்கரனின் கீர்த்தி,
இவையெல்லாம் ஒன்று கூட,
விநாயகர் வீறு கொண்டு எழுந்து நிற்கிறார்.
அல்லல் மிகுந்த இக்காலத்திலும் ஆலயம் காணும் கும்பாபிஷேகம்,
இவை அனைத்துக்கும் சான்று.
வரதராஜர் வரம் தரும் இராஜனாய்,
அன்பர் தம் வினைதீர்த்து என்றும் அருள் செய்வான்.
அவன் தாழ்பற்றி உய்வோம்.

☆☆☆☆☆

# ஐங்கரன் அருளிய மண்டபம்



கொட்டாஞ்சேனைப் பதியில் கோயில் கொண்டெழுந் தருளியிருக்கும் எம் பெருமான் விக்கினங்களைத் தீர்ப்பதில் விக்கினேஸ்வராகவும், தலைமைப் பதவியை நல்குவதில் கணபதியாகவும், உயர்வுகளைக் கொடுப்பதில் சிரேஷ்டராசாவாகவும், சகல செல்வங்களையும், வரங்களையும் நல்குவதில் ஸ்ரீ வரதராஜ விநாயகப் பெருமானாகவும் இன்னும் இவைபோன்ற பல திருவருள்களையும் நல்கிப் பக்தர்களை நிலையான உவகையில் திளைக்கச் செய்வதைக் கண்ணாரக் கண்டும் உளமார உணர்ந்தும் அனுபவித்து வரும் அடியார்கள் பலர். அதில் திரு. பொ. பாலசுந்தரம் அவர்களும் ஒருவர். திரு. தெ. ஈஸ்வரன் அவர்களுடன் அறங்காவலர் பொறுப்பை ஏற்கும் பாக்கியம் திரு. பொ. பாலசுந்தரம் அவர்கட்கு சித்தித்தது.

கொட்டாஞ்சேனைப் பதியில் ஆன்மிக அருளுரைகள், அறநெறிப் பாடசாலை வகுப்புக்கள், நூல் வெளியீட்டு நிகழ்வுகள் பஜனைகள், கீர்த்தனைகள் மற்றும் மங்களகரமான பொது வைபவங்களுக்கெல்லாம் ஒரு மண்டபம் இல்லையே என்ற திரு. பொ. பாலசுந்தரம் அவர்களின் நீண்டநாள் ஆசை, கனவு என்பவற்றை விநாயகப் பெருமான் நிறைவு செய்து வைத்துள்ளார். இவரது அரும் பெரும் பணியினாலும், விடாமுயற்சியினாலும் "மூன்று தளங்களுடன் 3000 சதுர அடி விஸ்தீரணத்தில் இன்று ஐங்கரன் மண்டபம் கம்பிரமாகக் காட்சி அளிக்கின்றது. ஞாயிறு தோறும் காலை அறநெறிப் பாடசாலை வகுப்புக்கள், மாதத்தில் முதல் ஞாயிறு, ஐங்கரன் சாயிமன்ற பஜனை, நூல் வெளியீட்டு வைபவங்கள், ஆன்மீக அருளுரைகள், மங்களகரமான வைபவங்கள் நிகழ்கின்றன. திரு. பொ. பாலசுந்தரம் அவர்களின் இந்த புனித தொண்டினை சைவ நன்மக்கள் என்றென்றும் தம் மனதில் நிறுத்தி வைப்பர்கள் என்பதில் சந்தேகமில்லை.

# அருள்மிகு ஸ்ரீவரதராஜ விநாயகர் ஆலய அமைவு

- பண்டிதர் சி. அப்புத்துரை-

கொட்டாஞ்சேனை பஸ்தரிப்பு நிலையச் சந்நிதியிலிருந்து, வடக்கு நோக்கிச் செல்லும் கொட்டாஞ்சேனை வீதியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்திற்கும் வடக்கே, கிழக்கு நோக்கிப் பிரிந்து செல்லும் வாசல வீதிச் சந்திக்கு வடக்கே, கொட்டாஞ்சேனைப் பொலிஸ் நிலையம் நோக்கிச் செல்லும் வழியில், சந்தியிலிருந்து சுமார் ஐம்பது மீற்றர் தொலைவில் வீதியின் மேற்குப் புறமாகக் கிழக்கு நோக்கிய ஆலயத்திலிருந்து அருள்மிகு ஸ்ரீ வரதராஜ விநாயகர் அருளாட்சி புரிகின்றார்.

ஆலயத்தின் முன்னே அழகியதொரு 42 அடி உயரமான கோபுரம் உண்டு. கோபுர வாயிலின் வடக்கில் ஆலயச் சுவருடன் சேர்ந்தாற் போல், ஆலயத்துட் செல்லுமுன் கைகால் முதலியவற்றைத் தூய்மை செய்வதற்குரிய புனிதநீர்த் தொட்டியொன்றுண்டு. தெற்கில் தேங்காய் உடைப்பதற்குரிய தொட்டி போன்றதொரு அமைப்பு உண்டு.

ஆலயத்தினுள்ளே கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம் என்னும் இரு அமைப்புக்களுடன் முன்னே பெரியதொரு மண்டபம் உண்டு. அந்த மண்டபத்துடன் ஒட்டிய சிறு பகுதி மற்றோர் மண்டபம் போன்று, "எவர்சில்வர்" அங்கி கொண்ட தண்டுகளாற் பிரிக்கப்பட்டுள்ளது. அங்கேதான் பலிபீடம் மூஷிகம் அமைதி கண்டுள்ளன. அர்த்த மண்டபத்தினுள் நுழையும் வாயிலின் தென்புறம் சதாசிவ மூர்த்தமாய சிவலிங்கமும், வடக்கில் அம்பாளும் சின்னஞ்சிறிய சந்திகளிலிருந்து அருள் புரிகின்றனர். உள்ளே மூலஸ்தானத்தில் வரதராஜ விநாயகர் அருட் கடாட்சம் பெருகுகின்றது.

முன்னுள்ள பெரிய மண்டபத்தின் தென்கிழக்கிற் சிறியதோர் அலுவலகம் உண்டு. தென்புறமுள்ள சுவர் நிறைவாக ஔவையார் ஆக்கமாகிய விநாயகர் அகவல் அழகிய எழுத்திற் காணப்படுகின்றது. அதன் அமைப்பு, அவசரஅவசரமாக வலம்வந்து வழிபட்டுச் செல்ல வேண்டுமென்ற எண்ணத்துடன் வலம் வருபவர்களைக் கூட ஈர்த்துச் சில நிமிடங்களையாவது தரித்துப் பார்க்கச் செய்கின்றது. தென்மேற்கில், மேற்கு வீதியோரமாக, அஸ்திர தேவர் வலமாக நாகதம்பிரான் இடமாகவும் உடனாகிய பாலவிநாயகரைக் கிழக்கு நோக்கிய சிறிய சந்நிதியிலே தரிசிக்க முடிகின்றது. அடுத்து மனோன்மணி அம்பாள் அருகே வேல் அருளாட்சிக் குள்ளாகின்றோம். தொடர்ந்து பழனி ஆண்டவர் அருள் பாலிக்கின்றார். வடமேற்கில் வள்ளி தேவயானை உடனாகிய முருகனைத் தரிசித்துப் பேரமைதியடைகின்றோம். வடகிழக்கிற் சிறிது மேற்காக வசந்த மண்டபம் அமைந்துள்ளது. அங்கே பஞ்சமுக விநாயகரின் அருளாட்சி கிடைக்கின்றது. அவர் முன்னே நர்த்தன விநாயகரைத் தரிசிக்க முடியும். பஞ்சமுக விநாயகரின் வலப்புறம் மற்றோர் எழுந்தருளி விநாயகரையும், இடதுபுறம் நடேசரையும் அவர் பக்கலிற் சிவகாமி அம்பாளையும் முன்னே சீர்திருத் தேவாரமும் திருவாசகமும் காண வைத்து, உய்வைத் தரச் செய்த நால்வரைக் கண்டு தொழ முடியும்.

வடகிழக்கில் நான்கு படிகள் தாண்டிக் கிழக்கு நோக்கி சென்று வடக்கே திரும்பிப் பார்த்தாற் பெரிய தோரரசு அரசோச்சுவதைப் பார்க்கலாம். இந்த அரசமரம் வரலாற்றுப் பெருமையை உடையது. அதாவது வழிபாட்டு ஆரம்பந் தொடக்கமாக நின்று கொண்டிருப்பது. இந்த மரத்தின் வடக்குப்புறமாக ஒரு கருங்கல் விநாயகரை வைத்து வழிபாடாற்றியுள்ளனர். ஒரு கருங்கல் நாகதம்பிரானும் இருந்திருக்கின்றார். இவர்களுக்குத் தீபம் ஏற்றக் கருங்கல்லிற் செதுக்கப்பட்ட ஒரு அமைப்பும் இருந்தது. அந்த விநாயகனையும், நாக தம்பிரானையும், கருங்கல் தீப அமைப்பையும் படியில் ஏறி வடக்கே திரும்பியதும் பார்க்கின்றோம். அந்த அரச மரத்தை வலம் வரும் போது வடக்கில் வலப்புறம் நாக தம்பிரானையும் வடகிழக்கில் இடதுபுறம் அஞ்சனப் புகையென ஆலமாமெனச் செஞ்சுடர்ப் படிவமேற் செறித்த மாமணிக் கஞ்சுகக் கடவுளைச் சிறியதோர் சந்நிதியிற் கண்டு வணங்கலாம். அப்பால் கிழக்குப் புறத்திற் கிழக்கு நோக்கியிருந்து அருளும் விநாயகனைப் பணிந்து வழிபாட்டினை நிறைவாக்கலாம்.

# கொழும்பு - கொட்டாஞ்சேனை,
# ஸ்ரீ வரதராஜ விநாயகர் மூர்த்தி தேவஸ்தானம்

### விநாயகர் துணை

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து

"வேழ முகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்"

### கோவிற்றிருப்பணி

1961 ஆம் ஆண்டு சித்திரை மாதம் ஸ்ரீ வரதராஜ விநாயக சுவாமி கோவில் திருப்பணி ஆரம்பமாயிற்று. இத் திருப்பணிக் கைங்கரியம் திரு. S. கனகராஜா திரு T. நீதிராஜா (J.P.) அவர்களிருவரினதும் தாராளமான நன்கொடையோடு சேர்ந்த விடாமுயற்சியுடன் மகாஜனங்களுடைய நன்கொடையும் விடாமுயற்சியும் சேர்ந்ததனால் ஒரு வருடத்துக்குள்ளேயே மிகவும் சிறப்பாகவும் பூர்த்தியாயிற்று.

### விநாயகப் பெருமான் கும்பாபிஷேகம்

09.06.1962 ஆம் ஆண்டு ஆனி மாதம் ஸ்ரீ வரதராஜப் பெருமானுக்கும், மற்றுமுள்ள பரிவார மூர்த்திகளுக்கும் திரு. C. இரத்தினசபாபதி அவர்களால் பிரதிஷ்டை செய்விக்கப்பெற்ற மனோன்மணி அம்பாளுக்கும் மிகவும் சிறப்பாகக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இக்கும்பாபிஷேக வைபவத்தைத் திறம்பட நடாத்துவதற்கு திரு. E. சண்முகம் அவர்கள் பெரிதும் உதவினார்கள். இதைத் தொடர்ந்து 45 நாட்கள் மண்டலாபிஷேகம் கொழும்பிலும் மற்றும் வெளியூர்களிலுமுள்ள அன்பர்களால் விசேட மேளக் கச்சேரிகளுடனும் அதிவிசேட இன்னிசைக் கச்சேரிகளுடனும் சிறப்பாக நடைபெறச் செய்விக்கப் பெற்று 24.08.62 ல் பூர்த்தியாயிற்று.

### ஸ்ரீ வள்ளி தெய்வானை சமேத சிவசுப்பிரமணிய பிரதிஷ்டையும் கும்பாபிஷேகமும்.

1963 ஆம் ஆண்டு ஆனி மாதம் மேற்படி ஆலயத்தில் ஸ்ரீ வள்ளி தெய்வயானை சமேத ஸ்ரீ சிவசுப்பிரமணிய மூர்த்தம் A. S. M. ஸ்தாபன அதிபர் திரு. M. கணபதி அவர்களால் பிரதிஷ்டை செய்விக்கப்பெற்றது. இம் மூர்த்திக்குரிய கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு, மேற்கூறிய திரு. ஆ. கணபதி அவர்களும், அவரைச் சேர்ந்தவர்களும் சகல செலவுகளையும் ஏற்று உதவினார்கள்.

### ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேத நடராஜ பிரதிஷ்டையும் கும்பாபிஷேகமும்

1964 ஆம் ஆண்டு ஆனி மாதம் மேற்படி ஆலயத்தில் திரு. A. R. அருணாசலம் அவர்களின் முயற்சியாலும், மற்றும் பல அன்பர்களது உதவியாலும் ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேத ஸ்ரீ நடராஜா மூர்த்தம்

பிரதிஷ்டை செய்விக்கப் பெற்றுத் தாபனமும் செய்விக்கப்பெற்றது. இம் மூர்த்தத்திற்குரிய கும்பாபிஷேக வைபவம் திரு. K. மகேஸ்வரன் அவர்களாலும், மற்றும் பல அன்பர்களாலும் வழக்கப்பெற்ற பணவுதவியால் வெகு சிறப்பாக நடைபெற்றது.

## இரதத் திருப்பணி

1965 ஆம் ஆண்டு ஆனி மாதம் புதிய இரதம் செய்விப்பது பற்றி ஆலோசிக்கப்பெற்று, அப்படிச் செய்விப்பதன் முக்கியத்துவத்தையும் ஆராய்ந்து இரதத் திருப்பணி ஆரம்பமாயிற்று. இந்த இரதத்தைச் செய்விக்கக் காரணகர்த்தாவாக இருந்தவர்கள் திரு. K. நாகலிங்கம் J.P. அவர்களும், திரு. S. கனகராஜா அவர்களும், திரு. T. நீதிராஜா *(L.P M. M. C . Senator)* அவர்களும், திரு. M. புரவியாபிள்ளை *(Merchant)* அவர்களுமே இவர்களுடன் மற்றும் எல்லா அன்பர்களும் மிகவும் ஆர்வத்துடன் தம்மால் இயன்றவரை பணத்தை அள்ளி அள்ளிக் கொடுத்து உதவினார்கள். இவர்களது உதவியுடன் மைலன் படமாளிகை மனேஜர் திரு. C. கந்தையா அவர்களது முயற்சியால் சினிமா ஸ்தாபனத்தினர் நிதி உதவிப் படக்காட்சி ஒன்று தந்து உதவியமை காரணமாகவும் அனேக அன்பர்கள் முன்வந்து பிரவேசச் சீட்டுக்களை *(Tickets)* யெல்லாம் விற்று உதவி புரிந்தமையாலும், சித்திர இரத வேலைகள் மிகவும் சிறப்பாகப் பூர்த்தியாயிற்று. இச்சித்திர இரத வேலையைச் சுழிபுரம் திரு. மு. இராமசாமி ஆச்சாரி குழுவினர் செய்து முடித்தனர். 1967 ஆம் ஆண்டு ஆனிமாதம் புதிதாகச் செய்து முடிக்கப்பெற்ற சித்திர இரதம் வெள்ளோட்டத்திற்கு விடப்பெற்றது.

## இரத பவனி

1967 ஆம் ஆண்டு ஆனி மாதம் 5– வது ஆண்டு வருஷாபிஷேகத்தின் போது ஸ்ரீ வரதராஜப் பொருமான் புதிய சித்திர இரத்தில் ஆரோகணித்து வீதிவலம் வந்து திருவருள் பாலித்தார்.

இந்த விசேட நிகழ்ச்சிகளில் அனேகமான அன்பர்கள் பங்குபற்றி மிகவும் உதவி புரிந்தார்கள். அவர்கள் எல்லோருக்கும் தர்மகர்த்தாக்கள் சார்பிலும், மேற்படி கோவில் பரிபாலன நிர்வாக சபையினர் சார்பிலும் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

## கூட்டுவழிபாடும் பஜனையும்

1963 ஆம் ஆண்டு மாசி மாதம் வட – கொழும்பு இந்து பரிபாலன சங்கத்தினரால் கூட்டு வழிபாடு, பஜனை, சமயபாட வகுப்புக்கள் என்பன கிழமைதோறும் ஒழுங்காக நடாத்தப்பட்டு வருகின்றன. இவைகளில் சுமார் 100 பிள்ளைகளுக்கு மேல் பங்குபற்றி வருகின்றார்கள். மார்கழி மாதத்தில் திருவெம்பாவைப் பஜனையுடன் வீதிவலம் வந்து மற்றைய அன்பர்களுக்கும் திருவருள் பாலிக்கச் செய்கின்றார்கள். இப்பஜனையைத் திரு. அன்பு சிவசம்பு, திரு. S. திருச்செல்வம், திரு. சி. பாலசிங்கம் திரு. M. பத்மநாதன் ஆகியோர் செவ்வனே நடாத்தி வருகின்றனர். மகாசிவராத்திரியன்று விசேட இன்னிசைக் கச்சேரிகள், பக்திப் பாடல்கள், கதாப்பிரசங்கங்கள் ஆகிய ஒழுங்கு செய்யப்பெற்றுச் சிறப்பாக நடாத்தப் பெற்று வருகின்றன. இப்பந்தியில் குறிப்பிடப் பெற்ற நிகழ்ச்சிகளில் திரு. ஆ. க. சுப்பிமணியம், திரு. க. சி. சண்முகம், திரு. மா. சு. கனகரத்தினம், திரு. க. இராஜேந்திரம்ஆகியோர் பிரதான பங்கெடுத்து வளர்த்து வருகின்றமை பாராட்டப்படுவதோடு இவர்களுடைய தொண்டு மிகவும் போற்றத்தக்கதுமாகும்.

விநாயக புராணம், கந்த புராணம், தேவி பாகவதம், திருவாதவூரடிகள் புராணம் என்பன வருடந்தோறும் படிக்கப்பெற்று வருகின்றன. ஒவ்வொரு புராணப் படிப்பும் பூர்த்தியாகும்போது விசேட

அபிஷேகம், பஞ்சமுகார்ச்சனை, அன்னதானம் என்பன இடம்பெற்று வருகினறன. மேலே குறிப்பிடப்பெற்ற புராணங்களை, திரு. ஆ. க. சுப்பிரமணியம், திரு. K. நாராயணப்பிள்ளை, திரு. க. சி. சண்முகம், திரு. N. பெருமாள்பிள்ளை, திரு. S. ஏரம்பு, திரு. க. வேலுப்பிள்ளை, திரு. க. இராஜேந்திரம் ஆகியோர் படித்து வருவது குறிப்பிடத்தக்கது.

## அபிஷேகங்களும் திருவிழாக்களும்.

மாதாந்தம் அபிஷேகங்களும் மற்றைய திருவிழாக்களும் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. விநாயகப் பெருமானுக்கு 12 மாதங்களிலும் வரும் ஒவ்வொரு சதுர்த்தியும், ஸ்ரீ சிவசுப்பிரமணியப் பெருமானுக்கு 12 மாதங்களிலும் வரும் ஒவ்வொரு கார்த்திகை விழாவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு ஒரு வருஷத்தில் ஆறு அபிஷேகங்களும் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

ஸ்ரீ அம்பாளுக்கு நவராத்திரி ஒன்பது நாட்களும் அபிஷேக ஆராதனைகளுடன் பலவித இன்னிசைக் கச்சேரிகளும், வாத்தியக் கச்சேரிகளும், பக்திப் பாடல்களும் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இதில் பல சங்கீத வித்துவான்கள் தாங்களாகவே முன்வந்து பங்கு பற்றிச் சிறப்பித்து வந்தமை நன்கு பாராட்டக்கூடியதே.

ஸ்கந்த ஷஷ்டி உற்சவம் வெகு சிறப்பாகவும், திருக்கல்யாண உற்சவம் பல கீத நாத், இசை, வேத, பண் ஆகிய இசைத்து முழங்கவும் வெகு சிறப்பாகவும் நடைபெற்று வருகின்றன.

பிள்ளையார் பெருங்கதை 21 நாட்களுக்கு அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இவ்வேளையில் விநாயகப் பெருமானுக்கு அபிஷேகம், பூசை என்பன வெகு சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இக் காலத்தில் பிள்ளையார் கதை, விநாயக புராண படலம் என்பன படிக்கப்பெற்று வருகின்றன.

மார்கழி மாதத்தில் திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி என்பன அபிஷேக ஆராதனையுடன் நடைபெற்று வருகின்றன. திருவாதிரை மிகவும் சிறப்பாக நடைபெற்று வருவதுடன் திருவூஞ்சல் வீதி வலம் வருதல் என்பனவும் இடம்பெற்று வருகின்றன.

**1968 ம் ஆண்டு வெளி வந்த**
**சிறப்பு மலரிலிருந்து**

# ஆலயத் திருப்பணிகள்

ம. நடராஜா (ஆலயத் திருப்பணிச் சபை)

"அருளிற் பெரிய தகிலத்தில் வேண்டும்
பொருளில் தலையிலது போல்"

(இவ்வுலகில் எல்லார்க்கும் எப்போதும் திருவருளிலும் மேலான பொருள் ஒன்றும் இல்லை)



இந்து சமுத்திரத்தின் முத்தென அழைக்கப்படும் இலங்கைத் தலைநகர் கொழும்பு மாநகரில் உள்ள கொட்டாஞ்சேனை வீதியில் 42 அடி உயர ராஜகோபுரத்துடன் விளங்குவது ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம்.

இவ் ஆலயம் பல ஆண்டுகளுக்கு மேல் அதிசிறந்த சக்தி வாய்ந்த ஆலயமாக விளங்கி வருகிறது. வேண்டுவோர் வினை தீர்க்கும் விநாயகப் பெருமான் 1999.12.05 அன்று பிரதிஷ்டாசிரோன்மணி நாவவியூர் சாமி விஸ்வநாதக் குருக்களால் ஆகம விதிக்கமைய பாலஸ்தானம் செய்து வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஆலயத்தின் புனருத்தாரண வேலைகள் மிகக் குறுகிய காலத்திற்குள் சிறந்த முறையில் நடைபெற ஆலய அறங்காவலர்கள், ஆலயப் பிரதேசத்தைச் சுற்றியுள்ள இறை அடியார்கள், ஏனைய அடியார்கள், பங்களிப்புடன் திருப்பணி வேலைகள் நிறைவேற வேண்டும் என்ற விநாயகரின் அருளுக்கிணங்க ஒரே அவாவின் நிமித்தம் ஆலயத் திருப்பணிச் சபையினர் கடந்த சில மாதங்களாக அடியார்களின் இல்லங்கள் நாடிச் சென்றபோது முகமலர்ந்து இனிது நோக்கி இன் சொல்லால் பணிவுடன் வரவேற்று தம்மால் முடிந்த வகைகளில் பணமாகவும் உபகரணங்களாகவும் திருப்பணிக்குத் தந்துதவியதோடு மண்டலாபிஷேகம் நடைபெறும் ஞாயிற்றுக்கிழமை மஹோஸ்வர பூஜை (அன்னதானம்) செய்ய முன்வந்த அடியார்கள் உதவியானது அதன் அளவையே எல்லையாக உடையது. அன்று அது உதவி செய்யப்பட்டவரின் பண்பையே தனக்கு அளவாக உடையதாகும். கடந்த 2 ½ வருடங்களாகத் தொடர்ந்து மாதங்களில் வரும் முதல் ஞாயிற்றுக்கிழமைகளில் ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய ஐங்கரன் சாயிபாபா மன்றத்தினர் நடாத்தி வரும் சாயி பஜனைக்குக் கொழும்பு ஸ்ரீ சத்திய சாயிபாபா மத்திய நிலையத்தினர் தொடர்ந்து தரும் அனுசரணைக்கும் திருப்பணியினர் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அத்துடன் ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அவ்வப்போது ஆலயத்திற்கு அவர்களால் இயன்ற பணிகளைச் செய்தமைக்கும் மற்றும் ஏனைய பணியாளர்களுக்கும் ஆலயத் திருப்பணியாளர்கள் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# ஐங்கரன் சாயி மன்றம்



உலகெங்கும் காணப்படும் சாயி, சமித்தி போன்று இலங்கையில் கொழும்பு மாநகரில் காணப்படும் பல சாயி மன்றங்களில் மிகவும் சிறப்புடன் இயங்கி வரும் ஒரு சாயி மன்றமாக கொட்டாஞ்சேனை ஐங்கரன் சாயி மன்றம் விளங்குகிறது. இச் சாயி மன்றத்தினால் மாதந்தோறும் முதல் ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 5 மணிக்கு ஸ்ரீ சத்திய சாயிபாபா பஜனை மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது. இப்பஜனையின் போது முதலில் தியானமும், அதனைத் தொடர்ந்து மந்திர ஸ்லோக உச்சாடனமும், பாபாவின் அருள் திறன் மிக்க பஜனை பாடல்களும் பாடப்பட்டு வழிபாடு நடைபெறுகின்றது. இப்பாடல்களை பாபாவின் பக்தர்கள் பாடுவார்கள். இந்த பஜனை காலத்தின் போது 15 நிமிட நேரம் பாபாவின் பக்தர்களாக விளங்கும் சர்வ மத பேரறிஞர்களால் ஆன்மீகம் சார்ந்த பாபாவின் சிந்தனைக் கருத்துக்கள் பற்றி சொற்பொழிவு ஆற்றப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து மீண்டும் பஜனைப் பாடல்கள் பாடப்பட்டு மங்கள ஆராத்தி நடைபெறும். இதனைத் தொடர்ந்து பிரசாதம் வழங்கல் நிகழ்வு நடைபெறும்.

பஜனை வழிபாட்டில் கொட்டாஞ்சேனை வரதராஜ விநாயகர் ஆலய அறங்காவலர்கள், ஆசிரியர்கள், மாணவ, மாணிவிகள், கொட்டாஞ்சேனை வாழ் சாயி பக்தர்கள் பெருமளவில் கலந்து சிறப்பிக்கின்றனர்.

ஐங்கரன் சாயி மன்றினால் ஒவ்வொரு வருடமும் பாபாவின் ஜயந்தி தினம் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. இம்மன்று எதிர் காலத்தில் பல்வேறு சர்வ மத சமூக சேவைகளை இந்த நாட்டு மக்களுக்கு வழங்க எல்லாம் வல்ல ஸ்ரீ வரதராஜ விநாயக பெருமானினதும், ஸ்ரீ சத்திய சாயி பாபாவினதும் அருளும், ஆசியும் கிடைக்க வேண்டுகிறோம்.

பொ. பாலசுந்தரம்
*தலைவர்*

ம. நடராஜா
*தலைவர்*

★★★★★

நமது இந்து தர்மம் எவ்வளவு வலுவுள்ளது என்பது நமது கோயில்களிலிருந்து தெரிகிறது.

அத்வைதமான இறைவனது அனுக்ரஹம் குடி கொண்டுள்ள இடம் கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ ஆலயம்.



பிரதம குரு

வேதாகம சூடாமணி

பிரம்மஸ்ரீ ந. சோமஸ்கந்தக் குருக்கள்





பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய ராகவ சர்மா

பிரம்மஸ்ரீ சபேசக் குருக்கள்

மூலஸ்தானத்தின் அழகு உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் மூலஸ்தானத்தில் வரதராஜப் பெருமான் எழுந்தருளி இருப்பதைக் காணக் காணப் பக்திச்சுவை நனி சொட்டும். இதையடுத்து பிரம்மஸ்ரீ ந. சோமஸ்கந்தக் குருக்கள், பிரம்மஸ்ரீ சபேசக் குருக்கள், பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய ராகவ சர்மா ஆகியோரால் எம் பெருமானுக்கு அலங்காரம் செய்த பின்பு பார்ப்பவர்கள் "கண்காள் காண் மின்களோ" என்று தம்மையும் அறியாமல் இசைந்து விடுவார்கள். அந்தளவுக்கு விநாயகப் பெருமானின் அருட் கடாட்சத்திற்குப் பாத்திரமான தேவஸ்தான சிவாச்சாரியார்கள்.

# இசையில் இறைவனைக் காண்போம்.

திருமதி சுப்புலட்சுமி மோகன்

*இசையாசிரியை: சென்னை*



இசைக்கு மயங்காதவர் யாரும் இல்லை இசையாளர்கள், கவிஞர்கள், ஓவியர், சிற்பி, தீர்க்கதரிசி, ஞானிகள் எல்லாம் இன்றைய உலகில் பூத்திருக்கும் மலர்கள், நாளைய உலகை நிர்மாணிப்பவர்கள். இதயத்தைத் தூண்டிவிடும் சக்தி இசைக்கு உண்டு. இசைக்கு ஊக்கம் தாருங்கள் அவை உங்கள் சிந்தனையை அழகுபடுத்தும்.

இத்தகைய சிறப்பான பண்ணோடு கூடிய இசையை, இறைவனை அனுபவிக்கும் இசையைக் கொட்டாஞ்சேனை அருள்மிகு ஸ்ரீ வரதராஜ விநாயகர் கோயில் அறநெறிப் பாடசாலை மாணவர்கட்குக் கற்றுக் கொடுக்கும் வாய்ப்பை விநாயகர் பெருமான் எனக்கு அருளினார்.

காலங்காலமாகக் கொண்டும் கொடுத்தும் வரப்பட்ட தமிழிசையும் தமிழ்ப் பண்களும், வருகின்ற புதிய தலை முறையினருக்கும் வழங்கப்பட வேண்டும் என்ற புனித எண்ணத்தில் செயற்பட்டு வரும் அறங்காலவர்களின் பணி தொடர விநாயகப் பெருமான் திருவருள் புரிவராக!

# வினை தீர்ப்பவனே ----
# விநாயகனே

விநாயனனே எங்கள்
வினைகள் தீர்ப்பவனே
சித்திகள் தருபவனே – எங்கள்
சிந்தையில் நிறைபவனே.

முஷிக வாகனனே – அவல்
மோதகப் பிரியனே
இடுக்கண் களைபவனே
இனிய வாழ்வு அளிப்பவனே.

முத்தமிழ் முதல்வனே
முக்கண்ணன் மைந்தனே. அருள்
வரதராஜ விநாயகனே!
வரந்தனை தருபவனே.

பாரினில் நிறைந்தவனே
பஞ்சம் பிணி களைபவனே
பக்தர் துயர் துடைப்பவனே
பாவ வினை தீர்ப்பவனே.

பாரினில் பட்டொளி வீசித் திகழ்பவனே
நின் பாதம் தொழுகின்றோம்
நித்தமும் எமக்கு நிம்மதி வாழ்வுக்கருள்வாயே!

மாவை - வானதி சச்சிதானந்தன்

# ஒரு பக்தரின் மனதிலிருந்து....

- சி. பாலசுப்பிரமணியம் -



**ஸ்ரீ** வரதராஜ விநாயகர் ஆலயத்திற்கு நான் முதன் முதலாக 1968ம் ஆண்டு வந்திருந்தேன். அதன் பின் விநாயகரின் அருளின் காரணமோ தெரியவில்லை. தினமும் காலையில் வந்து அவரைத் தரிசிக்காமல் விடுவதில்லை. விநாயகரின் ஆலயம் எப்படித் தோன்றியது பற்றி இவ்விதழில் உள்ள கட்டுரை மூலம் தெரிந்து கொள்ளலாம். இன்று இந்த ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் விநாயகர் மிகவும் சக்தியும் அருளும் உடையவராக விளங்குவதற்குக் காரணமாக இருப்பவர் பிரதமகுரு பிரம்மஸ்ரீ ந. சோமஸ்க்கந்தக் குருக்கள். அவர் தினமும் முறைப்படி பூசை நேரம் தவறாது பூசை செய்து வந்ததும் விநாயகரின் விஷேச தினங்களில் திருவிழாக்களை தவறாது செய்து வந்தார்.

ஆலயம் அப்பொழுது சிறியதாக இருந்தது. பிரதம குருக்கள் ஐயா மிகவும் சிறிய இடத்தில் எந்த அடிப்படை வசதிகளும் இல்லாத சூழ்நிலையில் வசித்துக் கொண்டு விநாயகருக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற முழு மனதுடன் ஆகம முறைப்படி பூசை செய்து வந்தார். உதய காலை பூசை முடிந்தவுடன் தானகவே புறக்கோட்டைக்குப் போய் அபிஷேகச் சாமான்கள், மற்றும் தூய்மையான பழவகைகள் தெரிந்து எடுத்து வந்து சிறப்பாகவே அபிஷேகங்கள் செய்தார். அதன் பலன்தான் இவ்வாலய விநாயகர் மிகவும் அருள் உடையவராக அவரை நாடி நிற்பவர்களுக்குப் பல நன்மைகளைச் செய்து வருகிறார்.

"நான் தினமும் வணங்கும் பொழுது முதலில் பக்தர்கள் கஷ்டப்படாமல் வசதியாகத் தரிசிக்க வேண்டும், 'பிரதமகுருக்கள் ஐயா வசதியாக இருக்கவும் இடம் வேண்டும் என்று விநாயகரை வேண்டி நின்றேன். இதே எண்ணம் பலருக்கும் இருந்தது. காலப்போக்கில் சிறிது சிறிதாக ஆலயம் விஸ்தரிக்க இடம் கிடைத்தது. ஐயாவிற்கு வசதியாக குருக்கள் வதிவிடமும் அத்துடன் ஐங்கரன் மண்டபமும் வரதராஜர் அருளால் கிடைத்தன.

மூன்று தர்மகர்த்தாக்கள் இருக்க வேண்டிய இடத்தில் திரு.நீதிராஜா அவர்கள் மாத்திரம் இருந்ததால் 1991ம் ஆண்டு ஸ்ரீ. தெ. ஈஸ்வரன், ஸ்ரீ. பொ. பாலசுந்தரம் ஆகிய இருவரும் இவ்வாலய தர்மகர்த்தக்களாக நியமிக்கப் பெற்றார்கள். தெய்வ கைங்கரியங்களில் நீண்ட காலமாகப் பயமும் பக்தியும் ஆழ்ந்த ஈடுபாடும் மிகுந்த இவர்கள் இருவரும் அறங்காவலர்களாக வந்ததையால், அடியார்கள் அவர்களை நம்பி பணஉதவி பொருள் உதவி செய்தார்கள். அன்றுமுதல் ஆலயம் துரித கெதியில் வளர்ச்சி அடைந்ததது.

இன்று கும்பாபிஷேகப் பெருவிழாவைக் காணும் ஸ்ரீ வரதராஜ விநாயகரை தரிசித்து இகபர சுகங்களையும் நன்மைகளையும் பெறுவோமாக.

நமது நாட்டில் சாந்தி சமாதானம் அமைதி சுபிட்சம் கிடைக்கப் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!

# பிள்ளையாரை வழிபட்ட பாலகன்

வே. தங்கராசா



முன்னொரு காலத்தில் சகல வளங்களும் நிறைந்த சிந்து தேசத்தில் பல்லி என்கிற பட்டினத்தில் கல்யாணன் என்ற வைசிகன் தன் மனைவி இந்துமதியோடு வசித்து வந்தான். அவர்களுக்கு வல்லாளன் என்றொரு தவச்செல்வன் பிறந்தான்.

அவன் பிள்ளைப்பராயம் அடைந்ததும், அயலிலுள்ள பிள்ளைகளுடன் மரங்கள் அடர்ந்த தோப்புக்களில் சென்று விளையாடுவான். அவ்வாறு விளையாடும்போது ஒருநாள், முன் தவப்பயனாய் ஒரு கல்லை எடுத்து அக்கல்லையே கணேசப் பெருமானின் திரு உருவமாகப் பாவித்து நீரால் குளிப்பாட்டி நறுமண மலர்களால் அர்ச்சித்துப் பயபக்தியுடன் பூஜை செய்து வரலானான்.

இம்மாதிரியாக நாளுக்கு நாள் அவனது பூஜைகள் விருத்தியடைந்து கொண்டே வந்தன. ஒருநாள் அதிகாலையில் தன் தோழர்களுடன் அத்தோப்புக்குச் சென்று, தான் விநாயகமூர்த்தியாகப் பாவித்து வந்த கல்லுக்குப் பூஜை செய்ய ஆரம்பித்தான். அவன் ஏவிய வண்ணம் அவனது தோழர்கள் அவன் பூஜை செய்யுமிடத்தைப் பூக்களால் பந்தல் அமைத்தும், பூஜைக்கு வேண்டிய பூச்சரங்களையும் பழவகைகளையும் சேகரித்து வந்து கொடுத்தனர். சிறுவனான வல்லாளன் பயபக்தியுடன் விநாயகமூர்த்திக்கு அபிஷேகம் செய்து, மலர்கள் சாத்தி, நைவேத்தியம், வைத்து பலவாறாகவும் பூஜித்தான். இவ்வாறாக வல்லாளனும் அவனது தோழர்களும் பசி, தாகம் அறியாது, வீட்டுக்குப் போகும் எண்ணம் இல்லாது விடியற்காலை ஆரம்பித்த பூஜையை மாலை ஆகியும் தொடர்ந்து நடத்தினர். ஊரார் தங்கள் வீட்டுப்பிள்ளைகளைக் காணாது அனைவரும் ஒன்றுகூடி வல்லாளனின் பெற்றோரிடம் முறையிட, இதனால் கோபமடைந்த வல்லாளனின் தந்தை கல்யாணன் ஒரு தடியுடன் தன் குமாரன், விநாகருக்குப் பூஜை செய்யுமிடத்திற்குச் சென்று, தான் என்ன செய்கிறேன் என்பதை உணராமல் அங்கு அமைத்திருந்த பந்தலைப் பிய்த்தும், மலர்களால் பூஜை செய்யப்பட்ட தெய்வக் கல்லை எடுத்து வீசியெறிந்தும் தன் மகனை அவனின் உடலில் இரத்தம் கசியும்படி அடித்து ஒரு மரத்துடன் கட்டி வைத்தான்.

வல்லாளன் மிகவும் வருந்தி தன் தந்தையிடம் கட்டுக்களை அவிழ்த்து விடும்படி மன்றாட, அவன் தந்தையோ சிறிதும் மனமிரங்காமல் உண்மையிலேயே விநாகருக்குப் பூஜை செய்திருந்தால், அவரே உன்னைக் காப்பாற்றட்டும் என்று ஏளனமாகக் கூறிவிட்டுப் போய்விட்டார்.

வல்லாளன் வேறுவழி அறியாது, விநாயகரை நினைத்து, உமது பக்திக்கு ஆட்பட்டவன் என்பது உண்மையானால், உமது திருவுருவத்தை சிதைத்தவன் இக்கணத்திலேயே குருடனாக, செவிடனாக, ஊமையாகி, உடலெங்கும் அழுகிய நோய்

கண்டு இரணம் ஒழுக நாளெல்லாம் துன்பப்படக் கடவான் எனச் சபித்தான். பின் மனம் உருகித் தனது உயிரை விடவும் முயன்றான்.

இதனால் விநாயகப் பெருமான் தன் பக்தனைக் காப்பாற்ற ஒரு பிராமணச் சிறுவன் வேடம் பூண்டு வல்லாளன் முன் வந்ததுமே அவனைக் கட்டியிருந்த கட்டும், அடி உதையினால் ஏற்பட்ட காயங்களும் ஒரு விநாடியில் நீங்கிப் போய் விட்டன. அதைக் கண்ட வல்லாளன் அச்சிறுவனின் திருவடிகளில் விழுந்து பலவாறாகவும் போற்றிக் கும்பிட்டான். வேதியனாக வந்த பிள்ளையார் அவனை அன்போடு தழுவி அணைத்து, உன்னால் அளிக்கப்பட்ட சாபத்தின் வேதனை பீடிக்கும்படி செய்து விட்டேன். நீ துன்பமடையாது நீ விரும்பும் வரங்களைக் கேள் என்றார். அதனைக் கேட்டு மகிழ்ந்த வல்லாளன் இந்த இடத்தில் நீர் கோயில் கொண்டருள வேண்டுமென இறைஞ்சினான். விநாகர் அவ்வாறே வரமளித்து "வல்லாளா ! உன்னுடைய பெயரை என்னுடைய திருநாமத்திற்கு முன்வைத்து வல்லாள கணபதி என்ற பெயருடன் இவ்விடத்தில் எழுந்தருளி உலகத்தவருக்கு வேண்டும் வரங்களை தந்தருளுவோம்" என்று கூறி ஒரு விக்கிர வடிவமாக அமர்ந்தார்.

விநாயகரின் அருளால் வல்லாளன் இட்ட சாபத்தினால் அவன் தந்தை பலவித துன்பங்களை அனுபவிப்பதைக் கண்ணுற்று மிகவும் வருந்திய அவனது தாய், தனது மகனிடம் தந்தைக்கு அருள்புரியுமாறு வேண்டி நிற்க, விநாயகப் பெருமானை வணங்கிச் சாபத்திலிருந்து நீங்கும்படி கூறினான்.

பின்பு வல்லாள கணபதியாக அமர்ந்திருக்கும் வடிவம் கண்டு பக்திப் பரவசத்துடன் அளவு கடந்த ஆனந்தத்தோடு விநாயகப் பெருமானுக்கு பூஜைகள் செய்து கொண்டிருக்கும் நாளில், விநாயகப் பெருமான் வல்லாளனின் பக்தியை மெச்சி, அக மகிழ்ந்தவராய் அவனைத் தமது உலகத்திற்கு அழைத்து வரும்படி கட்டளை இட, அதன்படி தேவ கணங்களும் வல்லாளனை தெய்வீக விமானத்தில் அழைத்துச் சென்றார்கள். வல்லாளனும் கணேசர் உலகத்தில் அவருடைய திருவடிகளில் நீங்காத பற்றுடன் போற்றிப் பணிந்து இன்புற்று இருந்தான்.

*மூலம் – விநாயகர் புராணம்*

# கருணைக் கடல்

கருணைக் கடலே கணபதியே
கணமேனும் மறவேன் நான் உனையே
வருமிடர் களைவாய் கணபதியே
வரங்களை அளிப்பாய் கணபதியே (கரு)

கற்றவர் புத்தியில் உறைந்திடுவாய்
நற்றமிழால் பாட மகிழ்ந்திடுவாய்
உற்ற துணையாயிருந்திடுவாய்
உய்ய வழியைக் காட்டிடுவாய் (கரு)

அம்மை அப்பனை வலம்வந்தாய்
அக்கனியை நீயும் பெற்றிடுவாய்
அம்மை அப்பனே உலகென்றாய்
அன்புடன் அவனடி பணிந்திட்டாய் (கரு)

க. இராசேந்திரம்
(தொண்டன்)

கொழும்பு கொட்டாஞ்சேனை

# அருள்மிகு ஸ்ரீ வரதராஜ விநாயகர்

## திருவூஞ்சல்

### *காப்பு*

சீர்பூத்த திருமாது மகிழுஞ் செல்வத்
திறம்பூத்த கொட்டாஞ்சே னையிலே மேவும்
பேர்பூத்த பிரணவத்தின் உருவே யான
பெருமைதரு வரதராஜ விநாய கர்க்குப்
பார்பூத்த பனிமலர்கைக் கொண்டு போற்றிப்
பண்பூத்த வூஞ்சலிசை பணிந்து பாடக்
கார்பூத்த கசடதட விகட மேவும்
கனிபெற்ற கரிமுகவன் கழல்கள் காப்பே.

### *நூல்*

1. நாதமொடு விந்துவெனுங் கால்கள் நாட்டி
நான்மறைகள் விட்டமதாய் நயந்து பூட்டிப்
போதமெறுங் சிவாகமநூற் கயிற்றை மாட்டிப்
பொலிவான ஓங்காரப் பீடம் கூட்டி
மாதவஞ்சே ரடியார்கள் வடந்தொட் டாட்ட
மணிமிளிரு நவரத்ன வூஞ்சல் மேவிப்
பாதமலர் பணிந்தேத்தும் அன்பர் வாழ
வரதராஜ விநாயகரே ஆடீர் ஊஞ்சல்.

2. பண்ணமரு மாடகையாழ் முனிவன் மீட்டப்
பாங்கினொடு தும்புருநற் பண்கள் பாட
விண்ணமரு நந்திமி ருதங்கம் கூட்ட
விளங்கிடு முனிவரர்கள் தாளம் போடக்
கண்ணிமையா வரம்பையர்கள் களிப்போ டாடக்
கருதுவினை யனைத்துமுடன் கலங்கி யோடக்
கண்ணியமாக் கொட்டாஞ்சே னையிலென்றென்றும்
கோயில்கொண்ட விநாயகரே ஆடீர் ஊஞ்சல்

3. அண்டமெலாம் தானாகி அனைத்து யிர்க்கும்
அருள்சொரியும் ஆதிசிவன் மைந்த னாகித்
தொண்டர்தொழு தேத்திநிற்கத் துலங்கித் தோன்றும்
தூயகரி முகத்தெந்தா யெனத்து தித்தே
கொண்டதுயர் நீக்குதற்குக் கொட்டா சேனை
குவல த்திற் சிறந்தபதி யெனத்துணிந்த
பண்டு புகழ் போற்றிடுவார்க் கருள்சுரக்கும்
வரதராஜ விநாயகரே ஆடீர் ஊஞ்சல்.

4. அகத்தியர்க்கன் றருள்புரிந்தா யென்பா ரோர்பால்
ஔவைக்கும் அருள்செய்தா யென்பா ரோர் பால்
அகக்கண்ணாற் கண்டுணர்ந்து அடங்கி நின்று
ஆராத காதலுடன் துதிப்பார் ஓர்பால்
செகத்தினிலே செயம்பெறச்செய் முதல்வா வென்று
சேர்ந்து நின்று தொழுவாரோர் பால தாக
மிகப்பெரிய கவுத்துவமும் மிளிர்ந்தே யாட
வரதராஜ விநாயகரே ஆடீர் ஊஞ்சல்.

5. கற்பகத்தின் மாமணியே கனியே தேனே
கதிரொளிபோல் அருள்வீசும் கணேசத் தேவே
பொற்புடனே மந்திரநீர் பனிநீர் சேர்த்துப்
பொலிவுடனே மானைந்தோ டிளநீர் கூட்டி
அற்புதமா யலைவீசும் கங்கை நீரும்
அபிடேகஞ் செய்துடனே அலங்க ரித்து
சொற்பதத்தாற் சோடசோ பசாரம் செய்யச்
சிறப்புடனே விநாயகரே ஆடீர் ஊஞ்சல்.

6. ஆதிசைவ அந்தணர்நால் வேதம் ஓத
அதிமதுரத் தமிழ்வேதம் அடியார் பாடக்
கோதில்வலம் புரியுடனே குரல்கள் ஆர்ப்பக்
கும்பிட்டு நிற்பார்தம் குறைகள் கூற
ஓதிடுநல் நாதஸ்வர ஓசை யோடு
ஓங்கியநற் றவிலொலியும் இணைந்து சேர
வீதியெல்லாம் வளஞ்சிறக்க வரம்கொ டுக்கும்
வரதராஜ விநாயகரே ஆடீர் ஊஞ்சல்.

7. ஆணவத்தாற் செருக்குற்ற ஆதி சேடன்
அருந்துயரம் மாற்றுதற்கே அருள்புரிந்தீர்
கோணலாச் சான்றுரைத்த கோல வண்ணன்
குறையிரந்து நிற்கவுடன் தீர்த்து வைத்தீர்
மாணலா முறுவலித்த நிலாவ ணங்க
மறைந்தபுகழ் மீண்டுபெற மனமி சைந்தீர்
பேணலுமைப் பெரிதெனநாம் போற்றி நின்றோம்
பேரருள்செய் விநாயகரே ஆடீர் ஊஞ்சல்.

8. தேவர்களும் துந்துபிகள் இசைத்து நிற்பத்
தேவாரத் திருமுறைகள் ஒலி சிறப்பப்
பாவலரும் புரவலரும் பார்த்தி ருப்பப்
பண்ணிசையைப் பாவையரும் பாங்கா யோத
நாவலரும் நற்றமிழால் இசை பரப்ப
நாற்றிசையும் முனிவர்கள் துதிசெய் தேத்த
கோவளரக் குலம்வளரக் கொட்டாஞ் சேனை
வரதராஜ விநாயகரே ஆடீர் ஊஞ்சல்.

9. மலைகளும் மகேஸ்வரனா ரோடு வந்து
மாமகனார் ஊஞ்சலினை இனிது நோக்கக்
கலைமகளும் அலைமகளும் களிப்பாய் நின்று
கவின்கையால் ஊஞ்சலினை அசைத்திருப்பத்
தலைச்சிறந்த அலங்காரப் பந்தல் நாப்பண்
தண்ணளிசே ரடியார்கள் களிப்போ டேத்த
அலையெனவந் தன்பரெலாம் அசையா நிற்ப
அருள்வரத விநாயகரே ஆடீர் ஊஞ்சல்.

10. விக்னவி நாயகரே ஆடீர் ஊஞ்சல்
விரும்புவரம் தருபவரே ஆடீர் ஊஞ்சல்
பக்தர்கட்கு அருள்பவரே ஆடீர் ஊஞ்சல்
பரமதயா பரநிதியே ஆடீர் ஊஞ்சல்
முக்கண்ணர் முதற்புலவா ஆடீர் ஊஞ்சல்
மூஷிகவா கனனாரே ஆடீர் ஊஞ்சல்
பக்குவமா யுமைமைந்தா ஆடீர் ஊஞ்சல்
பலர்போற்ற விநாயகரே ஆடீர் ஊஞ்சல்.

## *வாழ்த்து*

வேதாக மபுராணம் சிறந்து வாழி
விரும்புசிவா சாரியர்கள் பொலிந்து வாழி
ஏதமிலாச் சிவஞான தருமம் வாழி
ஏகதந்தன் அடியார்கள் என்றும் வாழி
மாதம்மும் மாரிமழை பொழிந்து வாழி
மாதவத்தோர் மனங்களிப்ப மலர்ந்து வாழி
கோதில்கொட் டாஞ்சேனை யுறைவோர் வாழி
கோலவிநா யகரருளும் வாழி வாழி.

## *எச்சரிக்கை*

உமையாள்தரு மகவேகண பதியே எச்சரீக்கை
எமையாள்பெரு நிதியேதிரு வருளே எச்சரீக்கை

மறையாய்மறைப் பொருளாய்ஒளிர் மணியே எச்சரீக்கை
மதிசூடிய சிவனார்மக வானாய் எச்சரீக்கை

நாலுங்கரத் தானைமுகத் தரனே எச்சரீக்கை
நமன்வாதனை நலியும்விநா யகனே எச்சரீக்கை

வரதராஜ நாயகமே ஐங்கரனே எச்சரீக்கை
வழுத்துமடி யார்க்கருளும் ஆனைமுக எச்சரீக்கை.

## *பராக்கு*

ஐந்துகரத் தானைமுகத் தையா பராக்கு
அரன்மைந்த அறுமுகவன் அண்ணா பராக்கு

மலையரையன் மகளார்பொன் மைந்தா பராக்கு
மாங்கனிக்காய் அத்தன்வலம் வந்தாய் பராக்கு

எந்தமையு மேற்றருள்செய் எழிலே பராக்கு
இயமபய மில்லெனச்செய் ஈசா பராக்கு

துதிக்கின்றோம் துணையாவாய் சுமுக பராக்கு
சுடர்வரத ராஜவிநா யகனே பராக்கு.

## *மங்களம்*

ஐந்துகரத் தையவரன் மகவாயினை மங்களம்
சிந்தைமகிழ்ந் தேதுதித்தோம் சிவைதனய மங்களம்

கயமுகனைக் காய்த்தமுக்கட் கணபதியே மங்களம்
பயமிலையெம் பங்கிலுறை பண்ணவர்க்கு மங்களம்

சீர்வாத நாயகமாம் சுமுகனுக்கு மங்களம்
பார்பரவ வாழுமுயர் பரன்மகவே மங்களம்

சித்திபுத்தி நாயகமே சிவன்மகவே மங்களம்
எத்திறத்தும் எமதிறையே எழிலுருவே மங்களம்.

சுபம்

# பிள்ளையார் வழிபாடு

பிரம்மஸ்ரீ சி. ஹரிஹர சர்மா



சமய நூல்களை, சஞ்சிகைகளை வாசிப்பதன் மூலம் அதிகளவு ஆன்மீக அறிவைப் பெற்றுக் கொள்ள முடிகிறது. எனினும், தற்போது நல்ல சமய நூல்கள் கிடைக்கப் பெறுவது சாதாரண ஒரு காரியமன்று.



இந்தக் குறையை நிவிர்த்தி செய்யும் வகையில் வெளியாகியுள்ள நூல்தான் ''பிள்ளையார் வழிபாடு'' ஆகும்.

'பிள்ளையார் வழிபாடு' எனும் இந்த நூலில் அரிய பல விஷயங்களைத் தொகுத்துத் தந்திருக்கிறார் கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய அறங்காவலர்களில் ஒருவரான திரு. தெ. ஈஸ்வரன் அவர்கள்.

இறைவன் "ஓசை ஒலியெலாமாய்" நிற்கின்றான். இந்து சமயத்தில் ஒலி ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. ஒலிக்கு மூலாதாரம் பிரணவம். இந்து சமயத்தில் முதலாவது வழிபடு தெய்வமாக விளங்குபவர் விநாயகர் பெருமான். அவரே பிரணவ ஸ்வரூபி; அவர் பிரணவாகாரமாக விளங்குகின்றார்.

அதனால், பிள்ளையாரை எந்த ஒரு கருமத்தின் போதும் முதலில் வணங்குகின்றோம். அவர் விக்னவிநாயகர்; வரக்கூடிய விக்கினங்களையெல்லாம் போக்கக் கூடியவர். அத்தகைய சிறப்பு வாய்ந்த மூலாதார ஸ்வரூபியான மூத்த கணபதியைப் பிள்ளையாராகப் போற்றி வணங்குகின்றோம்.

பிள்ளையாரைப் பற்றி அனைவரும் நன்கு அறிந்து கொள்ள வேண்டும்; அவருடைய தடத்த ரூப லக்ஷணத்தைப் பலரும் விளங்கிக் கொள்ள வேண்டும்; தத்துவார்த்தங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்கின்ற விழுமிய நோக்கோடு இந்த நூலைத் தொகுத்தளித்திருக்கின்றார், அறங்காவலர் தெ. ஈஸ்ரவன்.

'பிள்ளையார் வழிபாடு' என்ற தலைப்பில் வெளி வந்திருக்கும் இந்த நூலைக் கையில் எடுத்ததும், கிளேஸ் தாளினாலான அட்டைகள் இரண்டும், நூலின் உள் அமைப்பும் அதில் ஒரு கண்ணோட்டத்தைச் செலுத்தத் தூண்டுகின்றன.

பிள்ளையார் திருவுருவம் தாங்கிய அட்டைப் படங்கள் இரண்டும் அழகாகக் காட்சியளிக்கின்றன. புத்தகத்துக்கு உபயோகிக்கப்பட்டிருக்குத் தாள், நீடிய காலத்துக்கு வைத்துப் படித்துப் பயன்பெற உதவக்கூடியது; அத்துடன் அச்சும் மிகத் துல்லியமாக விளங்குகின்றது.

"ஓங்கார ஒலி, பிள்ளையார் சுழி, பிள்ளையார் திருவுருவம், பிள்ளையார் தோன்றினார், நாம் காணும் பிள்ளையார்" என்ற பொருள்களில் கட்டுரைகள் இடம் பெற்றிருக்கின்றன.

மேலும், கபில தேவநாயனார் அருளிச்செய்த 'மூத்தநாயனார் திரு விரட்டை மணிமாலை', அதிராவடிகள் அருளிச் செய்த "மூத்த பிள்ளையார் திரு மும்மணிக்கோவை", நம்பியாண்டார் நம்பிகள் அருளிச் செய்த "திரு நாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை", ஔவையார் அருளிய "விநாயகர் அகவல்", நக்கீரர் அருளிய "ஸ்ரீ விநாயகர் அகவல்", "ஸ்ரீ கணேசபுஜங்கம்", "விநாயகர் கவசம்", "திருப்புகழும் விநாயகரும்".

இராமலிங்க சுவாமிகள் அருளிய "திருவருட்பாவும் விநாயகரும்", போற்றித் திரு அகவல், மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் "விநாயகர் நான்மணி மாலை", "பிள்ளையார் கதை" முதலானவற்றின் இன்னோரன்ன பாடல்களும், விநாயகர் ஆலய அமைப்பு, வழிபாட்டுக்குரிய விநாயகர் இயந்திரங்கள் என்பனவும் இந்தப் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கின்றன.

இவை அனைத்துக்கும் மகுடம் வைத்தாற் போன்று, "நாம் காணும் பிள்ளையார்" என்ற தலைப்பில் கணபதியின் 32 நாமங்கள், அவற்றின் தோற்றங்கள், விளக்கங்கள் என்பனவும் படங்களுடன் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

நூலின் கடைசி அத்தியாயமாக 'GANESHA" என்ற தலைப்பில் ஆங்கிலக் கட்டுரையொன்றும் இடம் பெற்றிருக்கின்றது. ஆங்கிலத்தில் கணேச தத்துவத்தை அறிந்து, அனுபவிக்க வேண்டியவர்களுக்கு இந்தக் கட்டுரை நல்லதொரு விருந்தாகும்.

இந்த நூற் தொகுப்பைத் தயாரிப்பதற்கு திருவாடுதுறை ஆதீனம், சைவ சித்தாந்தப் பெரு மன்றம் மற்றும் பல சமயநூல் வெளியீட்டாளர்கள் வெளியிட்ட நூல்களைப் பயன்படுத்தியுள்ளதாக அறங்காவலர்கள் நூலில் தெரிவித்துள்ளார்கள்.

கட்டுரைகள் தரம் மிக்கவை; பயனுள்ளவை; விரத காலங்களில் படிப்பதற்கு, பாராயணஞ் செய்வதற்கு மிக உகந்தவை. இல்லத்திலும் சரி, பாடசாலையிலும் சரி, ஆலயங்களிலும் சரி இவற்றைப் படிக்கும் போது சிறார் மனதிலும் இவை ஆழப் பதிந்துவிடும்.

இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த புத்தகத்தைத் தொகுத்து வெளியிட்ட கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகர் கோவில் அறங்காவலர்களான திருவாளர்கள் த. நீதிராஜா, பொ. பாலசுந்தரம், தெ. ஈஸ்வரன் ஆகியோரை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

இந்த நூலை வெளியிடுவதற்கு உறுதுணைபுரிந்த காந்தளகம் திரு. சச்சிதானந்தம், ஓவியர் பூவரசு, புலவர் வெற்றியழகன் ஆகியோரும் பாராட்டுக்குரியவர்கள் ஆவர்.

இந்த உயரிய பணியில் ஈடுபட்டவர்க்கும் விநாயகப் பெருமான் சகல வரங்களையும் அருள்வாராக.

கொழும்பு கொட்டாஞ்சேனை

# அருள்மிகு ஸ்ரீ வரதராஜ விநாயக ஆலய

## நடராஜர் திருவூஞ்சல்

### *காப்பு*

கார்பெருக நீர்பெருகு கொழும்பூர் நாப்பண்
கற்றோர்கள் நிறைகொட்டாஞ் சேனை வாழும்
நீர்பெருகும் அளியடியார் நிற்கும் ஆர்வம்
நிறைந்ததிருக் கோயில்தனில் இனிது மேவி
சீர்பெருகு நடராஜப் பெருமான் மீதேல்
சிவகாம சுந்தரிமீ தூஞ்சல் பாட
வேரடியார் ஓங்குசிறீ வரத ராஜ
விநாயகநின் வீறடிகள் காப்ப தாமே!

### *நூல்*

1. இசைபெருகு நால்வேதங் கால்க ளாக
இன்பமிகு முபநிடதம் விட்ட மாக
நசையுறுமா கமங்களெலாம் கயிற தாக
நவங்கிளரும் பிரணவமே பீட மாக
வசையணுகா மந்திரங்கள் அணிய தாக
வடிவமைந்த ஊஞ்சல்மீ தினிது மேவி
மிசைவருகொட் டாஞ்சேனை அமர்ந்து வெற்றி
மிகுநடரா ஜவென் மணியே ஆடீரூஞ்சல்

2. இன்மயமாய் இலகுதிருச் சடையுந் தோன்ற
இமைப்பினொடு முப்புரிநூல் மார்பிற் றூங்க
சின்மயமாந் திருக்கரங்கள் திகழ்ந்து மின்ன
தீவினைகள் கெடஅபய வரதங் காட்டி
பன்னுதிரு மறைப்பொருளைப் பலருங் கொள்ள
பருதியொளி பகலெனவே பதிந்து வீச
மன்னியகொட் டாஞ்சேனை மகிழ்ந்து கங்கை
மதிசூடும் நடராஜ ஆடீ ரூஞ்சல்.

3. இந்திரனு மைந்துதிரு நாம மோதி
இமையவரோ டருகுநின்று பணிந்து போற்றச்
சந்திரனும் வெண்டரளக் கவிகை தாங்கத்
தகுதிபெறு சாமரங்கள் தனதன் வீசச்
சுந்தரஞ்சேர் தும்புருநா ரதர்கள் பாட
துதியினொடு மலர்மாதர் வடந்தொட்ட டாட்டச்
செந்திருகொட் டாஞ்சேனை சிறந்து வாழும்
செய்யநட ராஜமணீ ஆடீ ரூஞ்சல்.

4. துய்யமறை முதற்பொருளாய் நின்ற நாத
சோதிபெறு பாதியுமை ஆதி நாத
வையமுன் படைத்தருளு மெங்கள் நாத
மலரயன்தன் தலைகொடுசெண் டாடு நாத
வெய்யவர்முப் புரமுன்னர் எரித்த நாத
வெற்றிபெறு சூலமுடன் தோன்று நாத
செய்யமர்கொட் டாஞ்சேனை சிறந்து வாழும்
தேவர்நட ராஜமணீ ஆடீ ரூஞ்சல்.

5. நுன்னுதிரு வுறைசடையும் மதியு மாட
சோதிநிறை கங்கையுடன் ஓடி ஆட
மன்னுதிருக் கரங்களுடன் பணிக ளாட
வளர்கொன்றை மலர்மாலை வாங்கி ஆட
உன்னுமொரு பங்கினிளம் உமையு மாட
ஓங்குமறைச் சிலம்பணியும் பதங்க ளாட
மின்னொளிர்கொட் டாஞ்சேனை மிளிர அன்பு
மேவுநட ராஜமணீ ஆடீ ரூஞ்சல்.

6. மேருமலை போலொளிருஞ் சடையு மாட
மேவுமதி கங்கையுடன் மருவி யாட
ஊருவின்மேல் படமெழுந்த நாக மாட
உரித்தகரி யுரியாடை உழன்றே ஆட
சீருருவ மானதிரு நயனம் மூன்றும்
சிந்தனைசெய் வார்க்கருளி அசைந்தே ஆட
காரொளிர்கொட் டாஞ்சேனை மிளிர்ந்து வாழும்
கவின்கொள்நட ராஜமணீ ஆடீ ரூஞ்சல்.

7. தரித்தபுலி யதழ்ஒருபால் தயங்கி ஆட
தவத்தினர்கள் மனமொருபால் முயங்கி ஆட
விரித்தசடை விறல்வினையை வீட்டி ஆட
விளங்குமொரு மந்திரத்தில் வினைகள் ஓட
சிரித்ததிரு முக[illegible]க
சீர்கொண்டு நீலமலை போலச் சார
விரித்தமைகொட் டாஞ்சேனை விளங்க வாழும்
[illegible]ஞ்சல்.

8. அடைக்கலமே உனக்கெனுயிர் என்று சேர்ந்த
அந்தணனை அளித்திட்டுன் அபயந் தந்தே
புடைக்கவரு மந்தகனை உதைத்த கால்கள்
புதுமலராய் அடியார்கள் போற்றி ஏத்த
இடைக்குநிகர் மின்னெனெவே இவர்கள் அன்னை
இரக்கமுடன் இருவினைகள் போக்கி ஆட
நடைக்கணிகொட் டாஞ்சேனை நயந்து மேவும்
நாதநட ராஜமணீ ஆடீரூஞ்சல்.

9. ஆணுமிலி பெண்ணுமிலி அலியு மில்லா
அர்த்தநா ரீஸ்வரனாய் அமைந்த சோதீ
காணுமடி யார்க்கினிய சோதி யாகிக்
காணாத மூடருக்கே கலியு மானாய்
பேணுமுன தடியர்குறை போக்கி நாளும்
பெருகுநலம் ஈந்தருளு பெரும! ஞானக்
கோணலிகொட் டாஞ்சேனை கொழிக்க என்றும்
கோதைநட ராஜமணீ யாடீ ரூஞ்சல்.

10. அந்தணரும் ஆனினமும் அரசும் வாழி
அருமறையோ டாகமங்கள் அறங்கள் வாழி
முந்துமழை முகில்கற்பின் மாதர் வாழி
முதன்மையுறு சைவநெறி நீறும் வாழி
சந்தகம்கொட் டாஞ்சேனை சேர்ந்தோர் வாழி
சக்தியொரு மான்மழுவும் சிறந்து வாழி
செந்திருவாழ் கொட்டுநகர் சிறக்க மேவும்
சிவகாம சுந்தரியோ டாடீ ரூஞ்சல்.

## *எச்சரிக்கை*

திருவார்மலை மகளார்திகழ் பாகா எச்சரிக்கை
குருவாய்வரக் குமரற்கருள் குருவே எச்சரிக்கை
புலித்தோலுடை அரவம்அணி புனிதா எச்சரிக்கை
குலிசம் முனி யருளப்பணி கூர்ந்தாய் எச்சரிக்கை

மானோடொரு மழுவேந்திய மகிபா எச்சரிக்கை
கானார்பொடி நிறைவாயணி கபாலீ எச்சரிக்கை

வரதராஜவி நாயகனார் அத்தா எச்சரிக்கை
வரமீந்துயர் வாழ்வளிப்பாய் வரத எச்சரிக்கை.

## *பராக்கு*

ஆலால மமுதாயேற் றாண்டாய் பராக்கு
மாலாய அயன்மாற்கு மறைந்தாய் பராக்கு

தேவாரத் திருமுறையாய்த் திகழ்வாய் பராக்கு
நாவார நாந்துதித்தோம் நலஞ்செய் பராக்கு

வேதத்தோ டாகமமு மானாய் பராக்கு
பாதத்துப் பணிந்தனம்யாம் பரனே பராக்கு

புரமெரித்தோய் புரிசடையோய் புகலே பராக்கு
வரதராஜ விநாயகனார் அத்த பராக்கு.

## *மங்களம்*

ஆதியந்த மில்லாத அப்பனுக்கு மங்களம்
போதிலுறை அயன்தலையொன் றகற்றினையே மங்களம்

மாதுமையைப் பாகத்துப் பரவவைத்தாய் மங்களம்
பாதிமதி மீதுசடைப் பரிந்தோற்றாய் மங்களம்

நால்வேதப் பொருளாகி நமதானாய் மங்களம்
பால் போலும் நீற்றினொளி பரவநிற்பாய் மங்களம்

திருமுறைகள் தருபொருளே திருமகவே மங்களம்
பெருமைதரு மொருதலைமைப் பேறானாய் மங்களம்.

# புண்ணியஞ் செய்தவர்கள்

*என். சோமகாந்தன்*



'கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற ஆன்றோர் கூற்றை என் சிறுவயதில் கேள்விப்பட்டிருக்கிறேன்.

ஆலயங்களை மையமாக வைத்துத்தான் ஒரு ஊரின் ஒழுக்கம் வளர்கின்றது; சமூக உறவுகள் தழைக்கின்றன; ஒற்றுமை பிறக்கின்றது; சிற்பம், சித்திரம், இசை, மற்றும் கவின்கலைகள் செழிக்கின்றன. வழிபடுவோரின் உள்ளங்களில் மட்டுமல்ல புறவாழ்விலும் ஆலயங்கள் அமைதியை ஏற்படுத்துகின்றன என்பதைப் பிறகுதான் அறிய முடிந்தது.

கொட்டாஞ்சேனை மக்கள் புண்ணியஞ் செய்தவர்கள். இன்று வீதிக்கு வீதி சிறியதும் பெரியதுமாகக் கோவில்கள். அவற்றின் மணியோசைகளின் கலகலப்பில் அடியவர்களின் உள்ளத்தில் பக்தி பொங்குகின்றது. அருகிலுள்ள பூக்கடைகளில் தொங்கும் பூ மாலைகளின் அழகு கண்களுக்குப் பெருவிருந்து அவற்றின் மலர்களின் நறுமணம், உயர்தர ஊதுவத்தியுடன் போட்டியிட்டுப் பரவசம் எய்தச் செய்கின்றது. அடிக்கடி இசைவிருந்து நாதஸ்வரக்கச்சேரி, அறிவுக்கு உணவூட்டும் சொற்பொழிவுகள்! கொட்டாஞ்சேனை மக்கள் புண்ணியஞ் செய்தவர்கள்!

கொட்டாஞ்சேனையின் மூத்த கோவில்கள் என மூன்று ஆலயங்களைக் குறிப்பிடலாம். பொன்னம்பலவாணேஸ்வரம் என தற்போது அழைக்கப்படும் கொச்சிக்கடை சிவன் கோவில், சாஸ்திர விதிகளுக்கு அமையக் கட்டப்பெற்ற விஸ்தாரமான பெருங்கோவில். அடுத்தது, கொட்டாஞ்சேனை முத்துமாரியம்மன் கோவில். அடக்கமான கட்டிடம் என்ற போதிலும் சமய பேதங்களின்றி அம்பாளின் அருள் வேண்டி எல்லோரும் கூடும் இடம் அது. மூன்றாவது ஸ்ரீ வரதராஜ விநாயகர் என்று சிறப்பாக அழைக்கப்படும் கொட்டாஞ்சேனைப் பிள்ளையார் கோவில்.

முதல்முறை இக்கோவிலுக்கு நான் சென்ற தினம் இன்னும் ஞாபகம் இருக்கிறது. அது 1955 ஆகஸ்ட் மாதம் இறுதி வெள்ளிக்கிழமை. அதற்குச் சில நாட்களுக்கு முன்னர் கிராமத்திலிருந்து வந்து கொழும்பில் புதிதாகத் தொழிலில் சேர்ந்திருந்தேன். வேலை முடிந்து வந்து அறையில் சோர்ந்து படுத்திருந்த என்னை, எனது நண்பன் வெளியில் சென்று வருவோம் வா என இழுத்துக் கொண்டுவந்து இக் கோவிலின் முகப்பில் நிறுத்தினான். எங்களூர் வைரவ கோவிலிலும் பார்க்க மிகச்சிறிய கோவில்!

உள்ளே போகவா வேண்டாமா என அச்சமாக இருந்தது—ஒடுக்கமான

பழங்காலக்கதவு திறந்துகிடந்த போதிலும் முகப்புச்சுவர் வெடித்து, புதரும் செடிகளும் அதற்குள்ளால் எட்டிப் பார்த்தன. சுவர் விழுந்துவிடாமலிருக்க மரத்தால் மிண்டு கொடுத்திருந்தார்கள். உள்ளே நுழையும் போது எந்நேரமும் அச் சுவர் தலையில் விழுந்துவிடுமோ என அச்சமாக இருந்தது.

உள்ளே சென்றபோது அச்சிறிய கற்பக்கிரகத்தில் ஒற்றைத்திரி எரிந்து கொண்டிருந்தது. அந்த மெல்லிய விளக்கு ஒளியில் பிள்ளையார் பொலிவாக அழகாகக் காட்சி கொடுத்தபடி இருந்தார். அவர் சிரசிலும் தாழிலும் சில புஷ்பங்கள் பிரதட்சணம் செய்தபோது ஒரு குறுகிய குகைக்கு ஊடாகச் செல்வது போல சுவர்கள் இரு தோள்களையும் அழுத்தின. கர்ப்பக் கிரகத்தின் இடப்புறமாக புறாக்கூடு அளவிலான மடப்பள்ளி அறை. அதுவே அர்ச்சகரின் வாசஸ்தலமும் இயற்கைக்கடனுக்கும் குளிப்பதற்கும் பொலிசு நிலையத்தைக்தாண்டி தெரிந்தவர் எவரின் வீட்டுக்கு ஓட வேண்டியதுதான்!

1970களில் இருந்து இவ்வாலயத்தின் அயலில் சிலகாலம் வசிக்க நேர்ந்தது. காலையில் அலுவலகம் செல்லும் போது ஆலயத்தைத்தாண்டித் தான் செல்ல வேண்டும். வழிபடுவோரின் எண்ணிக்கையை விரல்விட்டு எண்ணிவிடலாம் என்ற போதிலும் காலைப்பூஜை நேர்த்தியாக இருக்கும். உள்ளவற்றைக்கொண்டு அடக்கமான அலங்காரம்; அர்ச்சகரின் மனம் ஒன்றித்த பூஜை; கற்பூர தீபாராதனையில் பெருமானின் திருக்கோலம் உள்ளத்தில் எழுச்சியையூட்டும்.

தொண்ணூறுகளின் முற்பகுதியில் இருந்து ஆலயத்தில், படிப்படியாகப் பிரகாசம் பளிச்சிடத் தொடங்கிவிட்டது!


உள்வீதி விஸ் தரிப்பு, கட்டடத்தை உயர்த்தி, காற்றோட்டமான உள்மண்டபம் சுவர்களில் ஓவியமாக விநாயகரின் திருக்கோலங்கள், அழகான சிறிய வசந்த மண்டபம், அங்கே நடராஜர், அம்மன், எழுந்தருளி மூர்த்திகள் பஞ்சமுக விநாயகர் என அழகுமிகு விக்கிரகங்கள். ஆலயத்துக்குப் பின்னால் எழில்மிகு ஐங்கரன் மண்டபம், அதற்கு மேல் அர்ச்சகருக்கான வசதியான இல்லம், ஐங்கரன் மண்டபத்தில் அறநெறிப்பாடசாலை,

அதோ! வேதியர்களின் வேதமந்திர ஒலி, நாதஸ்வர ஓசை, யாகசாலையில் இருந்து பிரதான கும்பம் புறப்பட்டுவிட்டது. பார்க்குமிடம் எல்லாம் பக்தர்களின் நெருக்கமான செறிவு. அரோஹரா! அரோஹரா என்ற பக்திமயம்! ஆலய மணிகள் துள்ளி ஒலிக்கின்றன. கெட்டி மேளம் கொட்டி முழங்குகிறது. பக்தி ஆவேசம் கொண்ட அடியவர்கள் மலர்களை அள்ளி மழை போல இறைக்கிறார்கள்! உடம்பு புல்லரிக்கின்றது. எமக்கு மட்டுமல்ல வாசலில் உள்ள அந்தப் பழைய புனித அரசமரத்துக்கும் தான்! காலம் காலமாகத் தன் கிளைகளை விரித்து விநாயகராலயத்துக்கு குடை பிடித்துக் கொண்டு நிற்கும் அந்த அரச மரங்கூட சிலிர்ந்துப் பெருமை கொள்கிறது!

வரங்களை வாரி வழங்குவதில் வள்ளலாக விளங்கும் வரதராஜ விநாயகர் உறையும் திருப்பதியைக் கொண்டிருப்பதாலும் தாராளமாகத் திருப்பணிக்கென வாரிக்கொடுக்கும் அடியவர்கள் நிறைந்திருப்பதாலும் பொதுமக்களின் நிதியுடன் இரட்டிப்பாக தமது பங்களிப்பையுமிட்டு ஆலயப்பணியில் தம்மை முழுமையான அர்ப்பணிப்புடனும் பக்தி விஸ்வாசத்துடனும் ஈடுபட்டுள்ள அறங்காவலர்களினாலும் கொட்டாஞ்சேனை மக்கள் கொடுத்து வைத்தவர்கள், புண்ணியஞ் செய்தவர்கள்.

*வாழ்க சீரடியாரெல்லாம்!*

திருக்கல்யாணக் காட்சிகள்.



ஸ்ரீ வள்ளி, தெய்வயானை மணப்பெண்களாக
ஆலய வசந்த மண்டபத்திலிருந்து
பக்தர்கள் புடைசூழ மணவறைக்கு வருகின்றார்கள்.



திருமணக் கோலத்தில்
ஸ்ரீ வள்ளி, தெய்வயானை சமேத
முருகப் பெருமான்

# கும்பாபிஷேகத்தில் சைவ சித்தாந்தம்

கும்பம்:



இதைக் கும்பஸ்தாபனம் எனக் கூறலாம் கும்பாடிபஷேகம் நடைபெறும் நாட்களில் ஆலய அலங்கரிப்பில் கும்பங்களே இடம் பெறுவதைக் காண்பீர்கள். ஈஸ்வர தேகமாகும் பொருட்டு கும்பத்தின் வஸ்திராதிகளைக் தேகத்தின் சர்மாதிகளாக நிருபித்திருக்கிறது. எவ்வகையெனின் கும்பத்தின் மீதிட்ட தேங்காய் சிரமாகவும், மாவிலைகள் சிகையாகவும், கும்பத்தை போர்த்த வஷ்திரமானது தேகத்தைப் போர்த்திருக்கும் தோலாகவும், கும்பம் சிவக்க மேலே பூசிய மண்ணானது செவ்விய உதிரமாகவும், மண் மாமிசமாகவும் கும்பத்தில் நிறைந்த தண்ணீர் மேதையாகவும் தர்ப்ப கூச்சம் எலும்பாகவும், கும்பத்தின் நாற்புறமும் சுற்றப்பட்ட நூல் நரம்பாகவும் கும்பத்தினுள் இட்ட பொன் முதலிய இரத்தினங்கள் சுக்கிலமாகவும் தியானஞ் செய்யப்பட்ட மந்திரம் உயிரகவும். கும்பத்தடியில் பலப்படியாக இடப்பட்ட நவதானியங்கள் கும்பமூர்த்தியாகிய ஈஸ்வரனுக்கு ஆசனமாகவும் ஆகமங்களில் கூறப்பட்டிருக்கின்றன. இவ்வாறு சிவனைக் கொண்டு வந்துள்ளோம் கும்பத்தில்.

சிவவழிபாடுடைய சமயம் சைவசமயம் என்பது வெளிப்படை கி. மு. 5000 ஆண்டு கட்கு முற்பட்ட காலத்தில் மொகஞ்சதாரோ. ஹரப்பா என்ற இடங்களில் வாழ்ந்த மக்கள் திராவிட தமிழ் மக்கள். சிவனை வழிபட்ட சிறப்புடையவர்கள். இதை நாம் ஆறாம் உலகச் சைவ மாநாடு தஞ்சையில் நடக்கும் போது வலியுறுத்தியுள்ளோம். சைவசித்தாந்தக் கைநூல் என்னும் சிறுநூலில் விரிவுபடுத்தியுள்ளோம்.

ஈழவழநாடு அதே வகையில் சிவவழிபாட்டில் மேன்மை பெற்றது. என்பதற்கு "இராவணன் மேலது நீறு,, என்னும் குறள் இரும்புத் தூணாகிறது. கோணேஸ்வரர் பதிகம், கேதீசர் பதிகம், கேதீசநாதர் பதிகம் பாடி நாட்டைச் சிறக்க வைத்தது மறக்கவும் மறைக்கவும் கூடியதவை. அல்ல சைவம் சிவனை வழிபடும் மதத்தைக் குறிக்குச் சொல். சிவம் என்பதிலிருந்து மருவிய சொல்லே சைவம் என்பதாகும். சிவனே முழுமுதற் தெய்வம் என நம்பி வாழ்ந்தவர்கள் சைவர்கள், அந்த நெறி சிவநெறியாகும். சிவம் என்ற சொல் நன்மை, மெருமை, மேன்மை, உண்மை, திண்மை, மென்மை என்ற பல சொற்சின்னங்கள் ஆன்மாக்களுக்கு இன்பத்தைத் தந்து சிவத்தை தருகிறார். அந்தச் சிவனிடம் இருந்து பலவற்றைப் பெறலாம். ஆனால் சிவனாக முடியாது இது ஆன்றோர் பலர் கூறியதுமன்றி, சைவசித்தாந்திகளும் ஒப்புக் கொண்டிருக்கும் ஓர் மேம்பட்ட கோட்பாடாகும்.

சித்தர் உண்டாக்கிய மாமரம் சிலமணி நேரமானபின் சிதறிளப் போகும். முதலைவாய்ப்பட்ட பூம்பாவை பலவருடம் வாழ்ந்து இன்புற்றிருந்த இதுவே சித்துக்கும், சிவத்துக்கும் உள்ள வேறுபாடு. செல்வம் எல்லோராலும் விரும்பப்டுவது. அந்தச் செல்வத்தை உடையவனும் கேட்பவர்களுக்குத் தருபவனும் செல்வன் என அழைக்கப்படுகிறான். செல்வனிடமிருந்து எல்லோரும் செல்வத்தைப் பெறலாம் ஆனால் அச் செல்வனாக முடியாது. என்பது உண்மை. வீரமுடையவர் வீரத்தைப் பெறும் வழிகளைக் கூறலாம். காட்டித்தரலாம் ஆனால் வீரத்தைத் தந்தவராக முடியாது.

இதை மணிவாசகப் பெருமான் "சித்தமலமறு வித்துச் சிவமாக்கியெனையாண்ட அத்தன் எனக்கு அருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே,, என்று வாதிடுகிறார்.

திருக்களிற்றுப் படியார் இன்னும் அழகாக் கூறுகிறார்.

"அவனிவானய் நின்ற தவனரளாலல்ல
தெவனவனாய் நிற்கின்ற தோழாய் – அவனிதனில்
தோன்றுமரப் புல்லூரி தொல்லுலகில் அம்மரமாய்
ஈன்றிடுமோ சொல்லா யிது.

**அதாவது:**

வாக்கு மானாதீத கோசரமாயுள்ள சர்வேசுவரன் ஆன்மாக்களைப் போல தேசியாய்த் தோன்றினது சகலரிற் பக்குவரான ஆன்மாக்களுக்கு அவர்களுடைய சத்தினிபாதத்திற்கு ஈடான சம்பவ காரணங்களாலே அவர்களுடைய பரமாநந்தத்தை அளிக்கும் தன்னுடைய அருளாலே திருமேனி கொண்டெழுந்தருளிவந்த தொழிந்து எப்படிப்பட்டவன் எப்படியாய் நிற்பானென்று சொன்னால் அறிவில்லாதவர்களே அஃது எப்படிப்பட்டதெனின் பூமியின் கண்தோன்றிய மரம் காரணம் கருதாது பழங்களைக் கொடுத்து மகிழ்விக்கும் ஆனால் மரத்தில் பற்றிய புல்லுருவி தான் சாரத்தையுண்டு வளர்ந்து இருந்தாலும் ஒருபோதும் அம்மரமாகாது. (புல்லுருவி என்பது குருவிச்சை மாமரத்தில் வளர்ந்தாலும் மாமரமாகாது.

இவ்வாறே இவன் வெளிப்பட்டு மானுடச் சட்டையுடன் வந்தணைந்து அருள் செய்வார் என்பதையும் அறிந்துள்ளோம். அவரை எப்படி எப்படி வணங்க வேண்டும்.

**வணக்கம் பூசை எனப்படும்.**

விக்கிரகங்களுக்கு பூசை செய்து கடவுளை நினைந்து அந்த மூர்த்தியிலே எதிர்முகப்படுத்தல். ஆவாகனம் எனப்படும். இதன்பின் ஸ்தாபனம் சந்நிதானம் சந்திரோதானம் செய்வது பாத்தியம். ஆசனம் அர்க்கியம், கொடுத்து பூவைச் சாத்தலாகிய ஏழுகிரியைகள் உண்டு. இவற்றின் மேல் அபிஷேகம், தூபதீபம், அர்ச்சனை, தோத்திரம் ஆகியவை இடம் பெறும். இவைகளினாலே நாம் புறப்பூசை செய்து சிவனை நினைந்து வேண்டுகிறோம். இவற்றை விட உட்பூசை செய்கிறவர்களும் உண்டு. இவர்களைக் காண்பது அரிது. இதைக் கூட விட்டுவைக்கவில்லை. சேக்கிழார் பெருமான் பூசலார் நாயனாரின் சரிதையால் உட்பூசையை விளக்கியுள்ளார்.

**இக்கதை** திரு நின்ற ஊரில் இருந்த வேதியர். இவர் சிவாலயஞ் சமைக்க ஆயத்தங் கொண்டு பொருள் இல்லாமையால் மனத்தால் சிவாலயம் ஒன்று இயற்றிக் கும்பாபிஷேகத்துக்கு நாள் வைத்தனர். "காடவர்கோ என்றும் அரசன் தான் சிவாலயப் பணி முடித்து கும்பாபிஷேகஞ் செய்வதற்கு நாயனார் வைத்த நாளே வைத்தனன். சிவமூர்த்தி அரசன் கனவில் எழுந்தருளி "நான் கும்பாபிஷேகத்துக்கு போகிறேன் நீர் மற்றொருநாள் வைத்துக் கொள்க என்று திருவாய் மலர்ந்து அந்தர்சமாயினார். இதைக் கனவில் உணர்ந்த காடவர்கோன் திரு நின்றவூர் வந்து திருக்கோயிலைக் காணாது பூசலாரின் மகிமையைக் கண்டு பணிந்து சென்றனன். இவர் போல மற்றைய நாயன்மார்களும் இருக்க முடியாது என்று வாதிடுவது சிறு ஓட்டையுள் ஒட்டகத்தைப் புகுத்துவதற்குச் சமமாகும்.

ஆனால் எல்லோரும் செய்து காட்டலாம் என நினைத்து மற்றவர்களுக்கு உபதேசஞ் செய்ய வெளிப்படுவது சேற்றினுள் கல்லை எறிவதற்கு ஒப்பாகும்.

யோக சித்தது கைவந்தவர்களும் இருந்திருக்கிறார்கள். இவர்களைப் பற்றி தாயுமான சுவாமிகள்.

"கந்துக மதக்கரியை வசமாய் நடத்தலாம்
    கரடி வெம்புலி வாயையும் கட்டலாம்
ஒரு சிங்க முதுகின்மேற் கொள்ளலாம்
    கட்செவி எடுத்தாட்டலாம்
வெந்தழல இரதம் வைத்து ஐந்து லோகத்தையும்
    வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர்காணாமல் உலகத்து உலாவலாம்
    விண்ணவரை ஏவல் கொள்ளலாம்
சந்ததமும் இளமையோடிருக்கலாம் மற்றொரு
    சரீரத்திலும் புகுதலாம்
சலமேல் நடக்கலாம் கனன்மேரிருக்கலாம்
    தன்னிகரில் சித்தி பெறலாம்

ஆனால் சிந்தையை அடக்கியே சும்மாயிருக்கிற திறமரிது காண், வெளிப்படையாக்கி கூறிப் போந்துள்ளார்.

சித்தருட் சித்தரான திருமூலரும் இருந்திருக்கிறார்கள். காலத்தால் முற்பட்ட சமயமாய் விளங்கும் சைவத்தில் தொன்று தொட்டே யோகநெறி கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. சித்தர்கள் பல அற்புதங்களைச் செய்வார்கள். இவைகள் நிலையற்றன. நிலையானவையே அற்புதங்களின் பாற்படும்.

வேதகாலந் தொடங்கி தேவார காலம் வரையும் பல்வேறு காலக்கட்டங்களில் அகத்தியர் என்ற பெயர் எடுத்தாளப்படுகிறது. இவரும் திருமூலரைப் போல சித்தரே ஆனால் ஒரே ஒருவர் தானா அதுவரை வாழ்ந்தவர் என்று எண்ணக் கூடாது.

எது எவ்வாறாயிருந்து வந்தாலும் சித்தர்கட்கும் ஒரு குருவேண்டும் சிவனுக்கும் ஒரு குருவுண்டு இவர்கள் காட்டும் வழியே வந்தவர்களே. மெய்கண்ட சாத்திரம், திருமுறை இவற்றின் ஆசிரியர்களே. இதனால் இவர் எனக்கு வழிகாட்ட வேண்டுமா ? என்று அண்ணாரக் கூடாது. சிவசமயமாகிய சைவ சமயத்தின் ஆசாரியர்களை குருவாக மதிக்காமல் கடவுளைக் காட்டும் கைக்கூலிக்காரர் என்று பேசுகிறார்கள். அடக்கம் எங்கே இருக்கு மென்றால் ஆலத்திலேதான். நாம் அடங்கி வாழ்கிறோம் என்று நினைத்து மற்றவர்க்கு உபதேசம் செய்யக்கூடாது. இதனால் சைவமோ சித்தாந்தமோ வளராது.

சித்தர்களின் தொகையைப் பற்றியும் நாமறிய வேண்டும். இதைத் தேரையர் பின்வருமாறு கூறுகிறார். சில பாடல்கள்

1. *"பாரப்பா கிரே தாயுகம் சித்தரப்பா*
*பலமனபெருக்கினுடை கணக்கைக் கேளு*
*நேரப்பா கோடியடா இரண்டு லெட்சம்*
*நிலையான கிரேதாயுகம் இலட்சம் கோடி*
*(தூ) தூரப்பா துவாபரத்தில் கோடி கேளு*
*தூக்கானது ஐம்பதென்ற ஆயிழந்தான்*
*காரப்பா கலியுகத்தில் கோடி கேளு*
*கணக்கு இபத்தை யாயிரந்தான் பாரே"*

(தேவரையர் சிவபூஜாவிதி எல்லாம் சேர்ந்து 37500 ஆகும்.)

2. *"சென்றிடவே வைத்தியமும் வாதமார்க்கம்*
*செயலான யோகம்முதல் ஞானமார்க்கம்*
*வென்றிடவே மாந்திரீகம் மாரண வேதம்*
*வேண்டியதோர் கருமானம் மிக உண்டாமே"*

அகத்திய முனிவர் ஏழு இலட்சம் பாடல்கள் பாடியதாகவும், தாம் கீழ்க் கண்டவாறு 2613 நூல்களைக் கண்டதாகவும் போகர் கூறுகின்றார். அகத்தியரே பின்வருமாறு பாடியுள்ளார்.

*"ஆச்சப்பா புலத்தியனே நன்றாய்க் கேளு*
*ஆறுலட்ச கிரந்தமதை அருளிச் செய்தேன்"*

வட மொழியாகிய கிரந்தத்திலே மறையாகத் தாம்பாடிய நூல்கள் எல்லாம் அழகு குன்றியதாயினும் வழக்குத் தமிழிலேயே (முருகு அவிழ் தமிழில்) பாடுமாறு இறைவன் ஆணையிட்டதாகவும் அவ்வாறே தாம் பாடியதாகவும் அகத்தியர் கூறியுள்ளார். இவ்வாறக அகத்தியர் வடமொழியாகிய கிரந்தத்தில் மட்டும் நாட்டுமக்கள் பெருமளவில் ஞான மார்க்கத்தில் ஈடுபட்டு கைகூடிய ஒருசிலர் மட்டுமே கிரந்த மொழியைக் கற்று ஞானமார்க்கத்தில் ஈடுபடும் வாய்ப்பைப் பெற்றனர். வடநாட்டு மக்கள் உயர்ந்தும் தமிழ்நாட்டு மக்கள் தாழ்ந்தும் போனதால் "உலகம் நடுவு நிலையில்லாது சரிந்தது என்ற உண்மையை ஞானிகள் சிலர் இறைவனிடம் முறையிட்டனர். அதைக் கேட்ட இறைவன் ஞானஜோதியாகிய அகத்தியரை அழைத்து சரிந்து விட்ட தமிழ் நாட்டிற்குச் சென்று முன்னிற்குமாறும் அங்கு மேல்பால் பழனி மலையில் உறையும் மெஞ்ஞானப் பிளம்பாகிய முருகவேளின் துணை கொண்டு எங்கும் ஞானச் சுடர் பரப்புமாறும் ஆணையிட்டார். இதுவே தமிழ்நாடு உயர்ந்தது என்ற பாஷையால் நிறைவேறியது. (இன்னும் ஓர் கதை) இன்னும் சிலர் சிவனது திருமணம் நடந்த போது வடதிசை தாழ்ந்து தென்திசை உயர்ந்தது தேவர் முனிவர் கிம்புருடர் போன்றோர். இதை நிவர்த்தி செய்ய தென்திசைக்கு குறுமுனியை அனுப்பினார் என்ற ஓர் கதை. எது எவ்வாறாயினும் வடமொழியின் மொழிபெயர்ப்பே சித்தாந்த ஆசாரியர்

மெய்கண்டாரின் சித்தாந்த சாத்திரம் உண்மை இதுவாறு ஒரு பக்கம் அமர மொழி பெயர்ப்பு என்பதை மாத்திரங் கொள்ளுதல் ஆகவே சிலர் தமது கொள்கையை நிலைநாட்ட உமாபதி சிவாசாரியார் அருளிச் செய்த திருவருட் பயனின் காப்புச் செய்யுளை கரைத்து விடுகின்றனர். காரணம்,

*"நல்குஞ்சரக்கன்று நண்ணிற் கலைஞாலம்*
*கற்கும் சரக்கன்று காண்"* குஞ்சரக் கற்று என்பது குஞ்சரத்தை மறைத்து விடுமென்றோ தெரியவில்லை.

இன்னும் ஆழமாய் ஆராய்ந்து பார்க்கில் கும்பாபிஷேகம் என்பதின் அர்த்தம் சித்தாந்தத்தைச் சித்தரிக்கும். இவைகளின் பின் நாம் என்ன செய்ய வேண்டும்.

இவைகளைக் கற்றபின் எப்படி நிற்கவேண்டும் என்பதையும் உரைக்க வேண்டும். முதலில் சிவயோக சுவாமிகளின் திருப்பள்ளி யெழுச்சியைக் கைப்பிடிப்போம்.

1. *அன்னை தந்தையர் மைந்தர்கள் ஒருபால்*
*அருமை சேர் சோதரர் உறவினர் ஒருபால்*
*பொன்னணி சிறுமியர் சிறுவர்கள் ஒருபால்*
*புகழ்பவர் இகழ்பவர் போபவர் ஒருபால்*
*சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்*
*தேசத்தில் திரிந்து இரப்பவர் ஒருபால்*
*கண்ணினைக் கண்டு களிக்கச் செய்பரனே*
*கடவுளே என்னுள்ளம் எழுந்தருளாயே.*

2. *மூலமந்திரம் சொல்லும் வேதியர் ஒருபால்*
*வேள்விகள் செய்ய விழைபவர் ஒருபால்*
*பூதபௌதிகங்களை ஆய்பவர் ஒருபால்*
*புகை வண்டியமைக்கும் பொற்பிலர் ஒருபால்*
*கீதத்தைப் பரவச் செய்யாழினர் ஒருபால்*
*கேட்டுமகிழ்ந்திருக்கும் கிழவர்கள் ஒருபால்*
*ஈதனைந்துஞ் செய்தும் செய்யாமலிருக்கும்*
*இறைவனே யென்னுளம் எழுந்தருளாயே.*

என்று சிவனை எழுந்தருளி உள்ளத்தில் வைக்க வேண்டும்.
அன்றி, திருக்களிற்றுப் படியாரின் பார்வைக்கு வருவோம்.

*வீட்டிலே சென்று வினை ஒழித்து நின்றிடிலென்*
*நாட்டிலே நல்வினைகள் செய்திடிலென்*
*சாத்தியே நின்றிலையேற் றக்கருர் வேள்வி செய்த*
*மாத்திரமே யாங்கண்டோம்வந்து,*

ஒரு பயனுமறிய மாட்டாது எல்லாம் அவன் செயல் என்று அறிவாயாக.
எப்படியாயினும் :

*பேரின்பமான பிரமக்கிழத்தியுட*
*னோரின்பத்துள்ளானை யுள்ளபடி – பேரின்பம்*
*கண்டவரே கண்டார் கடலுயிர்ந்த வின்பத்தை*
*யுண்டவரே யுண்டார் சுவை.*

*உறைமறையை உணர்வாறுமிலர்*
*மறையை உணர்த்துயாருமிலர்*

*சிவநெறிச் செல்வர், சைவநன்மணி,*
*ஞானவாரிதி, சொற்கொண்டல்*
*சித்தாந்த மாமணி*
இரா. மயில்வாகனம், ஜே. பி.

34/3 புளூமெண்டால் ஒழுங்கை,
கொட்டாஞ்சேனை.
*கொழும்பு 13.*

# மண்ணவரும் விண்ணவரும் மகிழும் மகா கும்பாபிஷேகம்

- ச. ஜெயகுமார் - முகாமையாளர் (ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம்)

*மண்ணிலே சமயபேத வழிபடும் புன்மை நீங்க*
*வெண்ணிய வீடுசேர்க்கும் வெறிந்சிவ முன்னோன் தன்னை*
*புண்ணிய வேதுவாகப் பொருந்திட வெமக்குத் தக்த*
*கண்ணிய மேவுஞ்சீர்ச் சேனைவாழ் வரதவி நாயகர் வாழி*



எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருளின் சிறப்பை உணர்ந்து எல்லாமக்களும் போற்றி வழிபடுவது அவசியம் இந்த நோக்கத்தின் அடிப்படையில்தான் நம் சான்றோர்கள் அருவமாய் இறைவனை ஆலயங்களில் உருவமாய் அமைத்து மக்கள் வழிபட வகை செய்துள்ளனர்.

மந்திர பூர்வமாக பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் மூர்த்திகளில் இறைவன் எழுந்தருளி உயிர்களுக்கு அருள்புரியும் இடமே ஆலயம். இவ்வாறு அருள் வழங்கும் ஆலயங்கள் நம் நாட்டில் எண்ணற்ற இடங்களில் அமைந்துள்ளன. ஆலயத்தின் மூலம் நம் நாட்டில் வரதராஜ விநாயகனின் திருவருள் பெருகிக் கொண்டு வருவதைக் கண்கொண்டு பார்க்கலாம். மாய மனத்தவர்க்கு அது தெரியாமல் இருக்கலாம். மெய்யடியார்க்கு கையூட்டு கண்ணாடியாக இருக்கும்.

நமது நாட்டில் காணப்படும் ஆலயங்களில் பெரும்பாலானவை மிகப்பழமை வாய்ந்தவை இந்த ஆலயங்கள் காலப் போக்கில் பழுதடைந்தோ சிதைவடைந்தோ விட்டிருப்பதைக் காண்கின்றோம். எனவே இத்தகைய கோயில்களின் ராஜகோபுரங்கள் விமானங்கள் மண்டபங்கள் கர்ப்பக்கிருகங்கள் பிரகாரங்கள், போன்றவை அவ்வப் போது பழுது பார்த்துத் திருப்பணிகள் செய்யப்பட்டு கும்பாபிஷேகங்கள் நடைபெறுகின்றன. இத்தன்மையே இவ்வாலயமுமாகும். இதனால் ஆலயங்களில் மேலும் மேலும் தெய்வீக ஆற்றல் அதிகரித்து அவை அருள் வழங்கும் கேந்திரங்களாகத் திகழ்ந்து வருகின்றன.

பொதுவாகப் பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை கும்பாபிஷேகம் நடைபெற வேண்டுமென்று ஆகமங்கள் கூறுகின்றன. இதில் ஓர் சித்தாந்தமும் உண்டு பன்னிரண்டு மாதம் ஓர் வருஷம் அப்படிப்பன்னிரண்டு வருஷம் ஓர் ஆண்டு இப்படிப் பன்னிரண்டு ஆண்டு இவரின் விழிப்பு. இறையே மனதில் கொண்டு நம்முன்னோர் வழிவழியாக வந்துள்ளனர்.

கும்பாபிஷேகம் சில காரணங்களின் அடிப்படையில் நான்கு விதமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை ஆவர்த்தம், ஆனாவர்த்தம், புனராவர்த்தம், அந்தரிதம் எனப்படும்.

ஆவர்த்தம்: ஓர் இடத்தில் புதிதாக ஆலயம் அமைத்து சிவலிங்கத்தையும் பரிவார தெய்வங்களையும் பிரதிஷ்டை செய்து மகா கும்பாபிஷேகம் செய்யப்படுவதை ஆவர்த்தம் என்று கூறுவர்.

அனாவர்த்தம் : நீண்ட காலமாகப் பூசை செய்யாற் காடு அடர்ந்த இடத்தில் உள்ள ஆலயத் திருத்தம்.

புனராவர்த்தம் : நடைமுறையிலுள்ள ஆலயங்களில் காலப் போக்கில் ராஜகோபுரம் முதலியவை பழுதுபட்டிருந்தால் அவற்றைப் புதுப்பித்து அஷ்டபந்தனம் இல்லாதிருந்தால் அவற்றை மீண்டும் சாத்தி அந்த அக்த மூர்த்தியை அக்த அந்த மூலத்தில் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்வது.

அந்தரிதம் : கோயிலுக்குள் யாராவது இறந்து போனாலும் கோயில் உட்புறத்தில் விலங்குகள். தூய்மை இல்லாதவர்கள் சமய உண்மையறியாத புறச் சமயத்தவர்கள் உள்ளே நுழைய நிகழ்ந்தாலும் செய்யப்படும் பிராயச் சித்தம் இதை சம்ப்ரோஷணம்.

மேற்கூறிய நான்கு வகைகளில் நமது வரதராஜ விநாயகரின் ஆலயத்தில் நடந்தேறிய கும்பாபிஷேகம் புனராவர்த்தம் என்பதில் நடந்தேறியது.

ஆசாரியர்கள் ஆகியவர் சொற்படி நடந்து கிரியை முறையாய்ச் செய்யலாம் வின்னேஸ்வரர் பூஜைக்கு பின்வரும் கிரியைகளைச் செய்யவும். அனுக்ஞை, வாஸ்து'சாந்தி, மிருத் ஸங்கிர்ஹணம் (மண் எடுத்தல்)

காப்புக்கட்டல் கும்பஸ்தானம் கலாலிர்ஷணம்

அதாவது:- சிவலிங்கத்திலுள்ள பிரசாத கலைகளையும் ஆறு அத்துவாக்களையும் (மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை) ஆன்மதத்துவம். வித்தியாதத்துவம், சிவதத்துவம் ஆகியவற்றையும் நியாயங்கள் மூலமாகவும் மூலமந்திர ஆவாகனங்கள் மூலமாகவும் கும்பத்தில் ஆவாகனம் செய்து குறிப்பிட்ட காலம் வரையில் இருக்கச் செய்வதால் இதற்கு கலாகர்ஷணம், என்று பெறும் எந்த மூர்த்தியை எந்த ரூபத்தில் ஆவாகனம் செய்கிறோமோ அந்த மூர்த்தியை அந்தக் கும்பத்தில் வழிபடுவதாகும்.

யாகபூஜை:- இறைவனை முறைப்படி ஆவாகனம் செய்து கும்பத்தை யாக சாலையில் ஒன்பது, ஐந்து ஒன்று என்ற யாக குண்ட முறைப்படி ஒவ்வொரு காலமும் பூஜை செய்வது இவ்வாறாகவும். இவற்றிற்கு மேலாகவும், பூரண சம்பிரதாய ஆசாரியர்கள் செய்து கும்பாபிஷேகம் செய்வார்கள். அன்பர்களும் அருள் ஆளர்கர்களும் கண்டு ஆனந்தித்து அருள் பெற வேண்டுமென்று வேண்டுகிறோம்.

# ஐங்கரன் அறநெறிப் பாடசாலை

- வி. குஞ்சரா-

*ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலை அதிபர்*

மங்கள கரமான பல வருடம் தைமாதம் 5ம் நாள் வியாழக்கிழமை பிற்பகல் 1.00 – 1.30 வரை உள்ள சுபவேளையில் ஸ்ரீ வரதராஜ விநாயகர் அருளால் ஐங்கரன் மண்டபம் திறந்து வைக்கப்பட்டது.

மண்டபம் உருவாகிய நாட்கள் தொடங்கி அறங்காவலர்கள் அறநெறிப் பாடசாலை அமைக்க வேண்டும் என்ற எண்ணத்தின் விளைவாக 1996ம் ஆண்டு 8ம் மாதம் 25ம் திகதி 4 ஆசிரியர்களுடனும் 125 மாணவர்களுடன் ராமகிருஷ்ண மிஷன் சுவாமி ஆத்மகணானந்தமகராஜ் அவர்களாலும், திருமதி ஆர். கைலாசநாதன் (பதில் பணிப்பாளரும் மேலதிக செயலாளரும்) அறங்காவலர்கள் தெ. ஈஸ்வரன், பொ. பாலசுந்தரம் அவர்களின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இன்று நான்கு வருட பாலர் குழந்தையாக இருக்கும் ஐங்கரன் அறநெறிப் பாடசாலையைப் பற்றி நோக்குவோம்.

"காலம் அறிந்து அங்கு இடம் அறிந்து செய்வினையின்
மூலம் அறிந்து விளைவு அறிந்து மேலும் தாம்
சூழ்வன சூழ்ந்து துணைமை வலி தெரிந்து
ஆள்வினை ஆளப்படும்"

செய்ய வேண்டிய ஒரு செயலை எப்பொழுது செய்யலாம் என்ற காலம் அறிந்து எந்த இடத்தில் செய்யலாம் என்ற இடம் அறிந்து செய்யப்போகின்ற செயலின் தன்மை அதன்பயன் ஆகியவற்றை முதலில் ஆய்ந்து அறிந்து மேலும் அறிய வேண்டியவற்றை அனுபவமிக்கவர்களிடம் கேட்டறிந்து செய்யப்போகும் செயலுக்குத் துணையாக உள்ளவர்களின் தன்மை அறிய வேண்டும்.

இதற்கு இணங்க ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய அறநெறிப்பாடசாலை அறநெறியோடு வாழ்வதைக் காட்டிலும் உயிருக்கு நன்மையானது இல்லை அறநெறியைப் போற்றாமல் மறத்தலைக் காட்டிலும் கேடானதும் இல்லை என்று சிறந்து முறையில் பாடசாலை இனிது நடைபெற அயராது உழைக்கும் அறங்காவலர்களும், எண்ணத்தாலே சிறந்த மனவுறுதி கொண்டவர்களது தொழில் திறமையானது பலராலும் நன்கு மதிக்கப்படுவது போல அமைந்து காணப்படும் முகாமையாளரும். "பளிபணி பற்றல் பல் மஞ்சனம் ஆதி என்று தொண்டுப்பணி செய்யும் தொண்டர்களும் அறங்காலவர்களால் ஆராய்ந்து அறிந்து எடுக்கப்பட்ட ஆசிரியர்கள் 6 பேரும் மாணவர்கள். 350 பேரையும் கொண்டு விளங்குகிறது.

காலை 8.00 மணிக்கு பூசையுடன் ஆரம்பமாகி அறநெறிக் கீதம் தொடர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்தும், தியானம் அதனைத் தொடர்ந்து காயத்திரி மந்திரம், சுலோகங்கள் சொன்ன பின்னர் பஜனை நடைபெறும் பின் ஆசிரியர்களின் நற்சிந்தனை வாரத்தில் வரும் (விஷேட சமய தினங்கள் பற்றி அமையும்) மாணவர் 5 நிமிடம் நற்சிந்தனை கூறுவர் பின் பூசை முடிய 9.00 மணிக்கு பாடங்கள் ஆரம்பிக்கப்படும்.

திருக்குறள், மகாபாரதம், இராமாயணம், பால போதினி, ஔவையின் மனுத்தத்துவம், உலக நாதன் நீதி நூல், ஆசாரக் கோவை, திருவருட்பயன், தனிப்பாடல் திரட்டு, புதிய ஆத்திசூடி, பாரதியார் பாடல்கள், ஆன்மீகக் கதைகள், தெய்விகக் கதைகள், ஸ்ரீ ராம கிருஷ்ணர் சாரதா தேவி விவேகானந்தர் சிந்தனைகள், நாலடியார், நீதிநெறி விளக்கம், திருமந்திரம், பெரிய புராணம், சைவபோதினி, பாடசாலை நூல் இதனை விட சங்கீதம், பண்ணிசை, பிரிவுகளுக்கு ஏற்ப நூல்கள் பிரிக்கப்பட்டு கற்பிக்கப்படுகிறது.

அவையாவன பாலர் பிரிவு, கீழ்ப் பிரிவு மத்திய பிரிவு, மேற்பிரிவு என நான்கு பிரிவுகள் உள்ளன. மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கல்வி பயின்று வருகின்றனர். இங்கு கல்வி பயிலும் மாணவர்கள் ஊக்கம் காரணமாக 2000. 04. 30 அன்று மாதந் தோறும் நடைபெறும் மாணவர் விழா ஆரம்பித்து வைக்கப்பட்டது. இது மாணவர்கள் தங்கள் ஆர்வத்தையும் திறமையையும் வெளிப்படுத்த வேண்டும் சகல மாணவர்களும் பங்கு கொள்ள வேண்டும் என்ற எண்ணக்கரு அமைந்து காணப்படுகிறது. இதன் நோக்கமே மாதம் நிகழும் மாணவர் விழாவாக அமைந்து இருக்கிறது.

எங்கள் பாடசாலையில் நாயன்மார் குருபூசை, திருமூலர், திருவள்ளுவர், நாவலர், விவேகானந்தர், ராமகிருஷ்ணர் போன்ற சைவப் பெரியார்கள் தமிழ் மகான்கள் தமிழ்ப் புலவர்கள் தினங்கள் சகலதுமே மாணவர்கள் அறிவை வளர்க்கும் நோக்குடன் நற்சிந்தனையாக அமைந்து காணப்படுகிறது. அத்தோடு சிவராத்திரி, நவராத்திரி போன்ற விழாக்களும் கொண்டாடப்படுகிறது.

மாணவர்கள் வெளிப்போட்டிகளுக்குச் சென்று பரிசில்கள் பெற்று வருவதும் வழக்கம் மாணவர்களின் பங்களிப்பு இப்பாடசாலைக்கு விநாயகரின் கொடையாக அமைந்து காணப்படுகிறது. வருடந்தோறும் க. பொ. த. சாதாரணப் பரீட்சையில் 6 Dக்கு மேல் எடுக்கும் மாணவர்களுக்கு 1999ம் ஆண்டு தொடக்கம் புலமைப் பரிசில் வழங்கப்படுகிறது. மாணவர்கள் அனைவருக்கும் 1997ம் ஆண்டு சேமிப்புப் கணக்கு ஆரம்பித்து சேமிப்புப் புத்தகம் வழங்கப்பட்டது.

பரீட்சைக்கு மாணவர்கள் தோற்ற இருந்தால் அவர்களுக்கு மேலதிக வகுப்புக்கள் நடைபெறுகிறது. 5ம் ஆண்டு புலமைப்பரீட்சைக்காக வருடம் தோறும் வரும் விடுமுறைகள் எல்லாம் தவறாது வகுப்புக்கள் நடாத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு பல நல்ல அறச் செயல்களை செய்துவரும் ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய ஐங்கரன் அறநெறிப் பாடசாலையின் வளர்ச்சி மேன் மேலும் பெருக வேண்டும் சைவப் பெருமக்கள் பயன்பெற வேண்டும். இதற்கு என்றும் விநாயகர் அருள் உண்டு.

# அறநெறிப்பாடசாலை ஆண்டு விழாவில்



அறங்காவலர்கள் சகிதம்
ஆசிரியர்களும்
நிர்வாகிகளும்



வில்லிசையில்
மாணவர்கள்





பண்ணிசையில் மாணவிகள்



திருப்பணி வேலைகள் விநாயகர் பெருமானின் திருவருளால் நிர்விக்னமின்றி நடைபெற்று வந்தன. பலர் முற்று முழுதாகவே தங்களை அர்ப்பணித்துச் செயல்பட்டனர் மற்றும் பலர் தாமாகவே முன்வந்து நிதியுதவி வழங்கி திருப்பணியில் இணைந்து கொண்டனர். அறநெறிப் பாடசாலை மாணவ மாணவிகளும் திருப்பணியில் ஈடுபட்டபோது.



# கொழும்பு கொட்டாஞ்சேனை
# ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம்

## ஆலயக் குருமார்கள்:

வேதாகம சூடாமணி பிரம்மஸ்ரீ. ந. சோமாஸ்கந்தக்குருக்கள், (பிரதமகுரு)
பிரம்மஸ்ரீ சபேசக்குருக்கள், பிரம்மஸ்ரீ சு. ராகவசர்மா

## அறங்காவலர்கள்:

பொ. பாலசுந்தரம்,
தெ. ஈஸ்வரன்,
தெ. வீரபாகு.

## திருப்பணிச் சபையினர்

திரு. சி. பாலசுப்பிரமணியம்
திரு. ம. நடராசா
திரு. து. ஜெகநாதன்
திரு. ச. ஜெயகுமார்
திரு. வி. கிருபாலர்
திரு. வி. க. ஜெயபாலசிங்கம்
திரு. எச். எச். விக்கிரமசிங்க
திரு. க. சிதம்பரேசன்
திரு. எம். பழனிச்சாமி
திரு. ஜி. பத்மநாதபிள்ளை
திரு. எஸ். சிவகுமார்
திரு. வே. தம்பிராசா
திரு. வி. ஜெயகுகன்
செல்வி. வி. குஞ்ஞரா
திரு. வி. சண்முகசுந்தரம்
செல்வி. வே. வடிவாம்பிகை
செல்வி. ச. சசிகலா
செல்வி. ச. வானதி
செல்வி. இ. நாகேஸ்வரி

உ

*சிவமயம்*

கொழும்பு கொட்டாஞ்சேனை

# அருள்மிகு ஸ்ரீ வரதராஜ விநாயகர்

## இரட்டை மணிமாலை

- பண்டிதர் சி. அப்புத்துரை -

### காப்பு

#### கட்டளைக்கலித்துறை

*பொன்னார்ந் திலங்குகொட் டாஞ்சேனைப் பூம்பதிக் கோயில்கொளும்*
*மின்னார் வரதரா சைங்கரன் பூங்கழல் மீதிலுயர்*
*மன்னு மிரட்டை மணிமாலை சூட்டி மனங்குளிர*
*முன்னித் துதிக்க முனைந்தனன் மூத்தவ முன்னிற்கவே.*

### நூல்

#### நேரிசை வெண்பா

1. கோதில்கொட் டாஞ்சேனைக் கோவே குளிர்நிலவே
ஆதி வரதரா சைங்கரனே – பூதலத்தோர்
போற்று மிரட்டைமணிப் பொன்மாலை சூட்டுதற்காம்
ஆற்ற லளித்தே யருள்.

#### கட்டளைக்கலித்துறை

2. அருள்வாய் வரதரா சைங்கர நின்கழற் காட்படுத்தி
மருள்வா யழுந்தி மனத்தது மாசா மறந்துனையான்
இருள்வாய்க் கிடந்தே னிருவினைத் துன்பத் திடரகலக்
குருவாய் வருவாய் குறைதீர்த் தருள்வாய் குலக்களிறே.

#### நேரிசை வெண்பா

3. களிபெறுமா றவ்வைதனைக் காதலித்தேற் றந்நாள்
ஒளிதிகழ்கை லாயத்தி னுய்த்தாய் – அளியேனென்
வந்திக்கா நெஞ்சை வரதரா சைங்கரனே
சிந்திக்க வைப்பாய் தெளிந்து.

#### கட்டளைக்கலித்துறை

4. தெளிந்தனஞ் செய்ய திருவடி தேராச் சிறுமையினை
பளிங்கெனக் கண்டோம் பரமன் திருத்தேர் பயிலுமச்சு
முளிந்திட முப்புரம் முற்றிலும் தீவெந்து மூழ்கையிலே
அளிந்திடு மன்பினோ டாள்வாய் வரதரா சைங்கரனே.

#### நேரிசை வெண்பா

5. ஐங்கரனே ஆனைமுகத் தைய அரன்மகனே
பிங்கலையாள் பேறே பிரணவமே – பொங்கிநலி
வல்வினைகள் வாட வரதரா சைங்கரநல்
கெல்லியில்பே ரின்ப புரி.

#### கட்டளைக்கலித்துறை

6. புரிந்துணா வில்லாப் புலையனேன் தன்னைப் புறத்திலிடா
திரிந்த திருவினை யின்புகா ணென்றே எழிற்கையினாற்
பரிந்தெடுத் துன்கழல் பற்றிப் படர்ந்திடப் பண்ணிடுவாய்
கரிந்த கயமுகற் காய்ந்த விநாயக காத்தருளே.

#### நேரிசை வெண்பா

7. காத்தனைநீ ஞாலம் கடமுனிதன் குண்டிகைநீர்
நீத்தமிகு காவிரியாய் நீண்டிடவே – மூத்தவனே
வாழ்வளிக்க வேண்டும் வரதார சைங்கரவென்
சூழ்வினைக ளெல்லாந் துரந்து.

#### கட்டளைக்கலித்துறை

8. துரந்தேன் வரதரா சைங்கர நின்பதத் தூநிழலை
இரந்தேன் இருவினை ஏகிட ஈடில்பே ரின்புணர்வு
பரந்து பரவிப் பணிந்துநின் றேனைப் பரிதவித்திங்
கிரங்கு நிலைதவிர்த் தன்பரை முந்துற வேற்றருளே.

#### நேரிசை வெண்பா

9. முந்து மடியருக்கு முற்படுத்தல் செய்குவையே
எந்தை யிணையடியே என்னடைவு – சிந்தைநிறை
மன்ன வரதரா சைங்கரநின் மைந்தனென
தின்னல்தீர்த் தேற்பாய் இனி.

#### கட்டளைக்கலித்துறை

10. இனிக்கண மேனு மியையா துனைப்பிரிந் திங்கிருக்கை
மனித்தப் பிறவி வரதரா சைங்கர மாண்புடைத்தென்
றினித்த முடைய இறையடி கண்டிட ஏங்கிற்றுளம்
பனித்தவுன் சீரடி பற்றித் தொடரப் பணித்தருளே.

#### நேரிசை வெண்பா

11. பணிந்தே பருப்பமுது பால்தெளிதேன் பாகு
துணிந்த கரும்புகனி தூபம் – திணிந்தவிருள்
சிந்துமொளித் தீபம் சிறக்கவமைத் தேன்திருமுன்
வந்தேய ருள்புரிகு வாய்.

### கட்டளைக்கலித்துறை

12. வாய்ந்த மனத்திய லாலுனை வாழ்த்தி வணங்குகின்றேன்
காய்ந்து கரிந்த கருங்கலா மென்றிடக் காழ்த்தமனம்
தேய்ந்து திருவொளிர் சிந்தைய னாயிடச் செய்தருள்வாய்
ஏய்ந்த சிறையினிற் சேந்தனை மீட்டனை எம்மிறையே.

### நேரிசை வெண்பா

13. எம்மிறைசேர் கோயில் எழிலார் திருத்தொண்டாற்
றம்வினைதீர்ந் தின்பார்தல் தாங்கண்டோம் – எம்மைநிதம்
வாட்டுவினை போக்கும் வரதரா சைங்கரவுன்
நாட்டமென்பா லாம்நம்பி னேன்.

### கட்டளைக்கலித்துறை

14. நம்பியுன் தாளிணை நாடி நயந்தேன் நமனுலகக்
கும்பி தவிர்த்துன் குரைகழற் கேயெனைக் கூவிடுவாய்
தம்பிமயிலெழத் தந்தையைத் தான்வலம் வந்துகனி
வம்பெனப் பெற்ற வரதரா சைங்கர வாழ்த்துவனே.

### நேரிசை வெண்பா

15. வாழ்த்த வணங்க வறியா வறியனையப்
பாழ்த்த நரகப் படுகுழிக்கண் – ஆழ்த்திவிடா
வண்ண மணைப்பான் வரதரா சைங்கரரென்
னெண்ணத் தினிக்கு மிறை.

### கட்டளைக்கலித்துறை

16. இறையவ வென்தன தின்ன லிரிந்திட வேயருள்வாய்
மறைமுதன் மைந்த வரதராச சைங்கர வாழ்முதலே
முறையிது வோவெனை மூண்டெழு துன்பியல் மூடைகளு
ளுறையவிட் டுன்னடி யானென்கை ஓங்காரத் துட்பொருளே.

### நேரிசை வெண்பா

17. பொருளெனவே போற்றினர் பொய்ம்மயக்குப் போக
விருள்நீங்கி இன்பநிலை எய்த – அருளினைகாண்
ஐய வரதரா சைங்கரநிற் காட்பட்டேன்
உய்திபெற ஒன்றியணை ஓர்ந்து

### கட்டளைக்கலித்துறை

18. அணைத்தனை நம்பியை ஆரமு தேற்றேயறிந்துவந்தோம்
பிணைந்தபிறவிப்பெருமையுணர்வினிற்பின்தொடர்ந்தேன்
இணைந்த இருவினை யேகிட வென்னையு மின்னடிக்கீழ்
பணைக்கை வரதரா சைங்கர வேற்குவை பற்றினனே.

### நேரிசை வெண்பா

19. பற்றுமிகும் ராவணன் பத்திசெய்த லிங்கமதோ
அற்புதமாய்க் கோகர்ணத் தானதே – மற்புயத்த
மாவரக்கற் றேய்த்தாய் வரதரா சைங்கரவென்
பாவவினை போகவெனைப் பார்.

### கட்டளைக்கலித்துறை

20. பாரதம் மேருவிற் பண்டு பொறித்தமை பாரறியும்
பேரதோ ராயிரம் பெற்றபெம் மான்சடைப் பிள்ளைமதி
நேரது கோட்டு நிறைவெனக் கொண்டென நேர்ந்தெனையும்
கோருவ னேற்க வரதரா சைங்கர கோதிலையே.

## அருள்மிகு ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம்
## வெளியிட்ட நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | பிள்ளையார் வழிபாடு | – | முதற்பதிப்பு 1992. இரண்டாம் பதிப்பு 1993.<br>தொகுப்பு: தெ. ஈஸ்வரன் B.com. |
| 2. | சக்தி வழிபாடு | – | முதற்பதிப்பு 1993. இரண்டாம் பதிப்பு 1997.<br>தொகுப்பு : தெ. ஈஸ்வரன் B.com. |
| 3. | சைவ வினாவிடை | – | முதலாம் புத்தகம். முதற் பதிப்பு 1994. |
| 4. | திருமுறைப் பண்ணிசை | – | முதற் பதிப்பு 1995.<br>தொகுப்பு: தெ. ஈஸ்வரன் B.com |
| 5. | சிவவழிபாடு | – | முதற்பதிப்பு 1995.<br>மதுரை கி. பழனியப்பனார். |
| 6. | திருக்குறள் | – | 1995.01.19 ஐங்கரன் மண்டபத்திறப்பு விழா நினைவு வெளியீடு. |

## பண்ணிசைப் பயிற்சி



தமிழிசையும் தமிழ் பண்களும் வருகின்ற புதிய தலைமுறையினருக்கு வழங்கப்பட வேண்டும் என்ற விநாயகப் பெருமானின் அருளாணைக்கிணங்க இசைப் பேரறிஞர் கலைமாமணி தருமபுரம் ப. சுவாமிநாதன் அவர்களின் வழிகாட்டுதலில் திருமுறையில் முறையாகப் பயிற்சி பெற்ற திருமதி. சுப்புலட்சுமி மோகன் அவர்களை இலங்கைக்கு அழைத்து வந்து மூன்று மாதங்கள் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது.

## ஐங்கரன் அறநெறிப் பாடசாலை
## முகாமையாளருடன் ஆசிரியர்கள்



வி.சண்முகநாதன், வானதி சச்சிதானந்தன், இ.நாகேஸ்வரி ம.நடராஜா(முகாமையாளர்),
வி.குஞ்சரா(அதிபர்), வே.வடிவாம்பிகை, ச.சசிகலா

கொழும்பு தமிழ்ச் சங்கம்

படங்கள் : [illegible]

ரம்பொடை வெவண்டன் மலைச்சாரலில் ஸ்ரீ பக்த ஆஞ்சநேயர்
பிரதிஸ்டை செய்யப்படுவதற்கு முன்னர் ஸ்ரீ வரதராஜ விநாயகப்பெருமானின்
அருளாசியுடன் 1999ம் ஆண்டு ஜூன் மாதம் 22ம் திகதி புறப்படும் காட்சிகள்









Graphics Designed and Printed by
Unie Arts (Pvt) Ltd. Tel/Fax :330195